சங்கீதபூஷணம், கலாபூஷணம்

# ஜீவம் யோசேப் அருளானந்தம்

முன்னாள் துணை அதிபர் - புனித மிக்கேல் கல்லூரி

அவர்களின்

# 31வது நினைவு தின மலர்

10-08-2013






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத பூஷணம், கலாபூஷணம், பல்லிசைக்குரிசில்

# திரு.ஜீவம் யோசேப் அருளானந்தம்

(ஓய்வு பெற்ற முன்னாள் உதவி அதிபர் - புனித மிக்கேல் கல்லூரி)




| | |
|---|---|
| பிறப்பு | :- 30.07.1939 |
| ஆரம்பக்கல்வி | :- அமிர்தகளி மெதடிஸ்த மிஷன் பாடசாலை |
| உயர் கல்வி | :- புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| பல்கலைக்கழகம் | :- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (1967-1971) |
| ஆசிரிய நியமனம் | :- 1972 - மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம். |
| திருமணம் | :- 1977 |
| மனைவி | :- யாழினி அருளானந்தம் |
| மகன் | :- எமில் பிரியானந்த் |
| மருமகள் | :- லாவணியா எமில் பிரியானந்த் |
| பதவி ஓய்வு | :- 1998 - புனித மிக்கேல் கல்லூரி |
| பரீட்சகர், விரிவுரையாளர் | :- சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப்பல்கலைக் கழகம். |
| மறைவு | :- 11.07.2013 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துடன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழின் கவிதைத் துளிகள்

பரலோகம் சேர்ந்தும் இதயத்துள் வாழும்
என் அன்புத் தெய்வமே!
நின் புன் சிரிப்பும் எழில் முகமும் - என்
நெஞ்சம் விட்டகலாது - எந்நாளும்

பூவுலகம் எமைப்பார்த்து பிரமிக்க - உன் துணையாய்
என் வாழ்வு மலர்ந்ததே!
பாசமெனும் இசையுடன் யாழின் நரம்பினை - மீட்டி
ஜீவகானம் ஒலித்ததையா எம் வீட்டில் - இனி
உங்கள் யாழின்நரம்பினை இசைமீட்டி - மகிழ்விக்க
நீங்கள் இல்லை என் வீட்டில்



நானும் மகனும் நிர்க்கதியாய் நின்று
மனம் உருகுவதைப் பாரீரோ!
எமை நிர்க்கதியாய் தவிக்க விட்டு
பரலோகம் சென்றதேனோ?

உள்ளம் உருகுதே! நான் என் செய்வேன்
உள்ளத்துள் மகன் உருகுகின்றான் - அவன்
குரல் ஒலி கேட்கிறதா? செவிகளுக்கு
இறுதி மூச்சு வரை இறை துதிபாடினீரே!
அன்னை வேளாங்கன்னியிடம் என்னை அழைத்துச் சென்றீர்
அவர் பாதம் வணங்கி என்னைவிட்டு பரலோகம் சென்றீரே

முப்பத்தைந்து ஆண்டுகள் நிறைவான
வாழ்வு தந்த என் - ஜீவகானமே!
குழந்தையாய் செல்லமாய் என்னை - பாரினிலே
கண்ணின் மணியாய் ஒளிதந்த - ஒளிவிளக்கே
துன்பம் துயரம் என்பதை நானறியேன் - என்னுயிரே

அன்பாலும் அரவணைப்பாலும் குறைவின்றி
நிறைவான வாழ்வை எனக்களித்த - என் தெய்வமே
எத்தனை பிறவியெடுத்தாலும் - நீங்கள் தான்
எனக்குத் துணைவர வேண்டுமே!

அன்புக்குத் துணை நின்ற - என் ஜீவனே
நான் இங்கு தனி மரமாய் தவிக்கின்றேன் - துணையின்றி
கூடவே தவிக்கின்றான் நம் அடையாளச்சின்னம்
எம் இருவருக்கும் எப்போது உம் வரவு கிட்டும்?
எப்போது நீர் வருவீர் எம் வீடுதேடி
உமக்காகக் காத்திருக்கும் எம் வாயில் என்றும்

குறைவில்லா வாழ்க்கையை நிறைவோடு வாழ்ந்த
மன ஆறுதலோடு உங்கள் ஆத்மா பரலோகத்தில்
சென்று நித்திய இளைப்பாற அன்னை வேளாங்கன்னியையும்
கப்பலேந்தி அன்னையையும் வேண்டுகின்றேன்.

*அன்பு மனைவி யாழினி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி மறவாத கனவான்
# கலாபூஷணம் ஜீவம் ஜோசேப்!

புனித மிக்கேல் கல்லூரியில் ஏறக்குறைய 25 ஆண்டுகள்-கால் நூற்றாண்டுகளாகச் கல்விப் பணி புரிந்து தனக்கென நிலையானதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர் இசைஞானி ஜீவம் ஜோசேப் அவர்கள் என்றால் மிகையாகாது.1974 தொடங்கிய பணி 1998 இவ் நிறைவு கண்டாலும் பெருமழை ஓய்ந்த போதும் நிற்காத தூறல் போல் தொடர்ந்தது.'என்னை உருவாக்கியது புனித மிக்கேல் கல்லூரி. என்னுடைய கல்லூரியிது ஏற்றம் எனக்குத் தந்த கல்லூரி மேலும் ஏற்றம்பெற வைத்திடுவேன்!.' என்று தனக்குள்ளே சத்தியப் பிரமாணப் பிரகடனம் செய்து கல்லூரிக்குள் கால் பதித்தவர் திரு.ஜீவம் ஜோசப்.

**இசையாசிரியர்**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் பட்டம் பெற்றவர். மிகமிகப் பிரசித்தி பெற்ற சங்கீத மேதை இசைப்பேராசான் தண்டபாணி தேசிகரிடம் சங்கீதம் பயின்றவர்.அப்படியே பேர்போன வயலின் வித்துவான் குன்னூர் நமச்சிவாயம் என்பவரிடம் வயலின் வாத்தியக் கருவியை இயக்கிடும் வல்லமையைப் பெற்றுக்கொண்டார்.

இப்பேற்பட்ட நிறைந்த இசைப் புலமைகளோடு நிறைவானதொரு சேவையாற்றிட இசையாசிரியராக இங்கு நியமனம் பெற்றார்.மூன்றாம் பிறைபோல முற்றாத நிலையிலிருந்த இசைத்துறை முழுநிலவாக முற்றிற்று.கல்லூரி இசைவானில் இன்றும் எங்கள் இசைத்துறை முழுநிலாதான்.அதன் ஜீவன் ஜீவம்தான்.மிக அருமையான குரல் வளம்.வயலின் உட்பட அநேகமான இசைக் கருவிகளை இயக்கிடும் ஆற்றல்.கூடவே பாடல்களை ஆக்கிடும் அபூர்வமான தமிழ்மொழிப் புலமை.இவரது கை விரல்களில் பிறந்தது நாதம்.இவரது குரலில் வளர்ந்தது கீதம். இசையில் தோய்ந்தவர்.எங்களைத் தோய்த்தவர்.

**பாண்ட் இசை**

'பாண்ட்' இசையைப் பொறுப்பெடுத்துக் கொண்டவர் அதனை புதுமெருகிட எண்ணம் கொண்டார்.புதிய புதிய வாத்தியக் கருவிகளைச் சேர்த்தார்.புதிய சங்கீதங்களைப் புகுத்தி அற்புதமான இசைவடிவம் தந்து பாண்ட் இசையை புதுமைப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்.எங்கு சென்றாலும் பாண்ட் இசைக்குப் புகழ்தான்.புனித மிக்கேல் கல்லூரி பாண்ட் இசையொன்றால் அதற்குத் தனியான பெருமையைப் பெற்றுத் தந்தவர் ஜீவமே!

**இன்னியம்**

தமிழ்ப் பாடசாலைகளில் தமிழர் பண்பாட்டுக் கலை வடிவின் அடையாளமான இன்னியத்தை உருவாக்க அப்போதைய வடகிழக்கு மாகாண அரசு முடிவு செய்து, அதற்குரிய தவில் நாதஸ்வரம் போன்ற வாத்தியக் கருவிகளை வழங்கியது.எண்ணி ஒரு ஆறுமாத காலத்திற்குள் மிகச் சிறப்பாக இன்னியம் படைத்த பெருமை ஜீவத்திற்கு மட்டுமேயுரியது.புனித மிக்கேல் கல்லூரியின் ஜீவம் தலைமையிலான மாணவர் இசைக்குழு பலமேடைகளில் மேளக் கச்சேரியை நடாத்தினார்கள்.எங்கும் எங்கள் இன்னியம் பற்றிய பேச்சாகவே இருந்தது.பல்வேறுபட்ட நிகழ்வுகளுக்கு எங்கள் இன்னியத்தை அழைத்தார்கள்.அத்தனை புகழும் ஜீவத்திற்கேயுரியது.

**தமிழ்த்தினப்போட்டிகள்**

ஆண்டுத்தோறும் நடைபெறும் தமிழ்த்தினப்போட்டிகளிலே காணப்படும் இசை தொடர்பான போட்டிகள் இவரிடமே ஒப்படைக்கப்படும்.பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்து சிறப்பான முறையிலே அவர்களைப் பயிற்றுவிப்பார்.அம்மாணவர்கள் அகில இலங்கை வரை சென்று தங்கப் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறுவார்கள்.குழு நிலைப் போட்டிகளுக்கு அவரே பாடல்களை ஆக்கி பயிற்றுவித்து அதிலும் அகில இலங்கையிலே முதலிடம் பெற வைத்திடுவார்.'வேண்டும் சமாதானம் வேண்டும் ஒற்றுமை' அவர் ஆக்கி இசையமைத்த இப்பாடல் மிகவும் பிரசித்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.

**சிற்பக்கலை**

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்குள் மட்டும் முடங்கி விடாமல் அதற்கப்பாலும் சிற்பம், ஓவியம் எனும் கலைகளிலும விற்பன்னனாக விளங்கியவர்.அந்நிய தேசமிருந்து இங்கு வந்து புனித மிக்கேல் கல்லூரியை வடிவமைத்த தவத்திரு பொனல் அடிகளாரது திருவுருவச் சிலையை வடிவமைத்து நமது தரிசனத்திற்காக கல்லூரி முன்றலிலே நிறுத்திய மகா சிற்பி ஜீவம்.ஆண்டுத்தோறும் நடைபெறும் கல்லூரி தினவிழாவிற்கு முதல் நாள் வருகைதந்து அடிகளாரது சிலையை அழகுபடுத்தித் தந்திடுவார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்லூரியிலே நடைபெறுகின்ற அனைத்து விழாக்களிலும் பங்குகொண்டு உழைத்திட்டவர். விளையாட்டுப்போட்டி,பரிசளிப்பு விழா,ஒளிவிழா இன்னோரன்ன அனைத்து விழாக்களினதும் வெற்றியின் பின்னால் அவரது பங்களிப்பு இருந்தது.

**உதவி அதிபர்**


அர்ப்பணம் நிறைந்த கடின உழைப்பு இவரைக் கல்லூரியின் உதவி அதிபராக உயர்த்தியது. ஓய்வு பெறும் காலம் வரை கல்லூரியின் உதவியதிபராக இவர் கடமையாற்றினார்.


இன்னும் இவர் வாழவேண்டும். இவரால் கலை மேலும் வளரவேண்டும் என்று நாம் நினைத்திருந்த வேளையில் அந்த துயரச்செய்தி பேரிடியாக வந்து வீழ்ந்தது.கல்லூரி தன்கொடி பதித்துக் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றது.கல்லூரி வாழும் வரை கலாபூஷணம் ஜீவம் ஜோசேப் அவர்களும் வாழ்வார்.





திருமதி.C.S.மாசிலாமணி,
அதிபர்,
புனித மிக்கேல்
தேசியபாடசாலை,
மட்டக்களப்பு.
2013.08.10










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரலும் இசைத்தது ! குரலும் இசைத்தது !

மட்டக்களப்பின் மீன்மகள் தன் பாட்டை நிறுத்திக் கொண்டாளோ ? வாவிமகள் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டாளோ? என்னும் வகையில் மாபெரும் இசைக்கலைஞன் ஜீவம் ஜோசப் அவர்களின் மறைவினால் மட்டக்களப்பு மண் சோகம் அப்பிக் கிடக்கும் இத்தருணத்தில் சுமார் ஐம்பது வருடங்கள் நான் திரும்பிப் பார்க்கிறேன்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். அப்போது அக்கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை, மற்றும் நடராஜமூர்த்தி ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற "காப்பியப் பெருவிழா" வின் இறுதி நாளின் மாலைக் கலைநிகழ்ச்சிகள் விளையாட்டு மைதானத்திலே நிர்மாணிக்கப்பட்ட திறந்தவெளி அரங்கிலே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மாணவர்கள், ஆசிரியர்கள், ஊரவர்கள் என்று பெரும் கூட்டம் திரண்டிருந்தது. மேடையில் கவிஞர் காசி ஆனந்தன் இயற்றிய,

"மீன்மகள் பாடுகிறாள்
வாவிமகள் ஆடுகிறாள்
மட்டுநகர் அழகான மேடையம்மா! இங்கு
எட்டுத் திசையும் கலையின் வாடையம்மா!
ஏலேலோ ஏலேலோ ஏலேலோ ஏலேலோ....."

என்ற பாடலை ஜீவம் ஜோசேப் சகோதரர்கள் ஜீவம் ஜோசேப்பின் இசையமைப்பிலே இசைக்க அந்த இசையில் எல்லோரும் வசமாகி நின்ற நிகழ்வு எந்நினைவில் நிழலாடுகிறது. இதுவே அவருடனான எனது முதல் சந்திப்பு.

அதன்பின் அவருடைய இசைக்கச்சேரிகள் - அவர் அணிசேர் கலைஞனாக அணிசெய்ய அரங்கேறிய நாட்டிய நாடகங்கள் - கலைநிகழ்ச்சிகளில் பார்வையாளராகப் பங்குபற்றிய பல சந்தர்ப்பங்கள். பின்னர் என்னுடைய திருமணமும் அவருடைய திருமணமும் எம்மை உறவுக்காரர்களாக நெருக்கமாக்கின. அண்மைக்காலத்தில் அவரது வீட்டில் அவருடனான எனது நீண்ட சந்திப்பும் உரையாடலும் "செங்கதிர்" சஞ்சிகையின் ஏப்ரல் 2009 இதழில் (வீச்சு 16) அட்டைப்படத்திலும் அதிதிப்பக்கத்திலும் அவரை இடம்பெற வைத்தது.

அமரர் ஜீவம் ஜோசேப் அவர்களின் தந்தை ஜோசப் கோணாமலை அவர்களிடம் வயலின் ஒன்றும் ஆர்மோனியப் பெட்டி ஒன்றும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் மார்க்ரட் ஜோசேப் அவர்களும் பாடக்கூடியவர். இவரது மூத்தசகோதரர் மறைந்த டாக்டர்.ஞானப்பிரகாசம் அவர்கள் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் "பாண்ட்" வாத்தியக் குழுவில் இருந்தவர். அவர் ட்றம்பட், கிளாரினட் முதலிய வாத்தியக் கருவிகளைப் பயிற்சிக்காக வீட்டுக்கு எடுத்து வந்து வாசிக்கும் போது பார்த்து இவரும் அவற்றை மீட்டக் கற்றுக்கொண்டார். இசை ஆர்வமும் ஆற்றலும் உள்ள குடும்பப் பின்னணி காரணமாகப் பிறப்பிலேயே இசை ஞானம் ஊறியிருந்த ஜீவம் ஜோசப் அவர்கள் இளமைக்காலத்தில் வீட்டிலிருந்த கிராமபோன் மூலம் இசைத்தட்டுகளில் இருந்து வெளிவரும் பாடல்களோடு சேர்ந்து பாடி தனது இசைஞானத்தை வளர்த்துக்கொண்டார்.

தனது ஆரம்பக்கல்வியை மட்டக்களப்பு கோட்டமுனை மகா வித்தியாலயத்திலும் பின்னர் புனித மிக்கேல் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்த ஜீவம் ஜோசப் அவர்கள் இளமையிலே இசைநாட்டம் உடைய வரானதால் பாடசாலைக் கலை நிகழ்வுகளில் பங்குபற்றியதுடன் போட்டிகளில் பரிசுகளையும் பாராட்டுக்க ளையும் பெற்றுக்கொண்டார். மட்டக்க ளப்பில் இன்று சிறந்து விளங்கும் இசைக்கலைஞர்களை உருவாக்கிய சங்கீதபூஷணம் நமசிவாயம் அவர்களே ஜீவம் ஜோசப் அவர்களின் ஆரம்பக் குரு.

ஜீவம் ஜோசேப் அவர்களின் சகோதரர்களும் இசைக்கலைஞர்களே. எல்லோருமே பாடவும், இசைக்கருவிகளை வாசிக்கவும் ஆற்றல் படைத்தவர்கள். 1960 இல் பிரபல இந்திய நட்சத்திரங்களான எஸ்.எஸ.ராஜேந்திரன் - விஜயகுமாரி இலட்சிய தம்பதிகள் இலங்கை வந்திருந்தபோது பதுளை நகரில் அவர்களுக்குப் பிரமாண்டமான வரவேற்று அளிக்கப்பட்டது. அதில் ஜீவம் ஜோசப் சகோதரர்களின் இசை நிகழ்ச்சி பெரும் வரவேற்பையும், பாராட்டையும் பெற்றது. மேலும் 1960 களில் மேடை நாடகங்களுக்கு பெரும் வரவேற்பிருந்தது.

எழுத்தாளர் இரா.நாகலிங்கம் (அன்புமணி) எழுதி சாகித்திய பரிசுபெற்ற "திரைகடல்தீபம்" என்ற நாடகத்தில் ஜீவம் இசையமைத்த "நீயா நானா சொல் நிலவே...", "தெய்வமாகிப் போனாள்....." போன்ற பாடல்கள்; ஆரையூர் இளவல் எழுதி சாகித்திய பரிசுபெற்ற "சிங்களத்துச் சிங்காரி" என்ற நாடகத்தில் இடம்பெற்ற "காத்தி ருப்பேன்...." என்ற பாடல்; "கருப்பு ராஜா சிவப்பு ரோஜா" என்ற நாடகத்தில் இடம்பெற்ற "கருப்பு ராஜா...... என்ற பாடல்; ஜீவம் ஜோசேப் அவர்களே எழுதி நடித்த "இதயம் ஓய்வதில்லை" என்ற நாடகத்தில் இடம்பெற்ற "இதயகீதம் ஓய்வதில்லை" என்ற பாடல் போன்றவை மிகவும் பிரபல்யம் பெற்றவை.

கவிஞர் காசி ஆனந்தன் எழுதி ஜீவம் ஜோசேப்பின் இசையில் 1966ம் ஆண்டு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இலங்கை வானொலிக்காக பிரபல்ய வானொலி ஒலிபரப்பாளர் சானா தயாரித்த தீபாவளிக் கதம்ப நிகழ்ச்சியின் போது முகப்புப் பாடலாக அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மீன்மகள் பாடுகிறாள்...." என்ற பாடல் இன்றும் கூட இலங்கையிலும் இலங்கைத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகளிலும் இசைக்கப்படும் அளவுக்குப் பேர் பெற்றுள்ளது. இதனை முதன் முதலில் பாடியவர்கள் இவரது சகோதரர்கள் குணம் ஜோசேப், ஞானம் ஜோசேப் இவர்களுடன் மற்றும் திருமதி.ஏஞ்சல் கருணைரெத்தினம் ஆகியோரே. இது போன்று "மீன்பாடும் வாவியிலே ஓடம் விடுவோம்', 'வெள்ளி நிலவினிலே', 'மண்ணை நம்பி', 'வேண்டும் சமாதானம்' போன்ற பாடல்களும் சிலாகிக்கத்தக்கவை. 1966இல் தீபாவளிக் கலைவிழா நேரடி ஒலிபரப்புக்காக மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட 'நரகாசுரன் வதை' என்ற நாட்டுக்கூத்தில் மட்டக்களப்பு வரலாற்றில் முதன் முறையாக மேற்கத்திய வாத்தியக் கருவிகளைக் கொண்டு ஜீவம் ஜோசேப் சகோதரர்கள் இசையமைத்தனர். இவர்களது மூத்த சகோதரர் காலம் சென்ற டாக்டர்.புவனேசராசா அவர்கள் அபாரமாக மத்தளம் வாசித்து அண்ணாவிமார்களின் பாராட்டைப்பெற்றார். விஞ்ஞானத் துறையில் பயின்றிருந்த ஜீவம் ஜோசேப் அவர்கள் முழுமையாக இசைத்துறைக்கு வந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒரு முறை கவிஞர் காசி ஆனந்தன் இவரிடம் நீங்கள் இந்தியாவிற்குச் சென்று இசைத் துறையில் படித்து முன்னேறினால் என்ன? என்ற கேள்வியைக் கேட்டபோதே ஜீவம் ஜோசேப் அவர்களுக்கு இசைக்கலையை இந்தியா சென்று பயில வேண்டும் என்ற அவா எழுந்தது. இதனால் இந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'வயலினை'ப் பிரதானமான பாடமாகக் கொண்டு படித்தார். வயலினை திருவாளர்.கிருஸ்ணபிள்ளை என்பவரிடம் கற்றார். 1971ம் ஆண்டு சித்திரை மாதம் பரீட்சையிலே முதற் பிரிவில் சித்தியெய்து 'சங்கீதபூஷணம்' பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். கிழக்குப் பகுதியிலே முதன் முதலாக முதல் வகுப்பில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்றவர் ஜீவம் ஜோசப் அவர்களே. இசைப் பேரரசு எம்.எஸ்.தண்டபாணி தேசிகர் அவர்களே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவருக்குப் பேராசிரியராக இருந்தார். பல்கலைக்கழகத்தின் சார்பில் திருச்சி வானொலி நிலையத்தின் நிகழ்வொன்றிலும் கலந்து கொண்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்து இடது கையால் வில் போட்டு வாசித்து (Left hand violinst) வெளிவந்த மாணவன் இவர் மட்டுமே. இதுவரை அப்படி பயிற்சி எவரும் மேற்கொள்ள வில்லை.

அன்னைவேளாங்கண்ணி ஆலய தரிசனத்திற்காகத் தமிழ்நாடு சென்றிருந்த வேளையில் ஜீவம் ஜோசேப் அவர்கள் மறைவதற்கு முன் தான் இசைபயின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பலவிதமான வாத்தியக் கருவிகளை மிகவும் இலாவகமாக இயக்குவதில் சமர்த்தரான இவர் மேலைத்தேய, கீழைத்தேய இசையிலும் பாண்டித்தியம் பெற்றவர். கிளாரினட், சக்ஸபோன், ட்றம்பட், ட்றொம் போன், புல்லாங்குழல், றெக்கோடர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்கோடியன், கீபோட், நாதஸ்வரம், முகவீணை, கிட்டார், இங்கிலீஸ் மெண்டலின், ஒகன் போன்ற இருபத்தைந்திற்கும் மேற்பட்ட வாத்தியக்கருவிகளை வாசிக்கும் வல்லமை பெற்றவர். மட்டக்களப்பில் ஒரே மேடையில் 16 வாத்தியங்களை வாசித்து 'பல்லிசைக் குரிசில்' என்ற பட்டத்தைப் பெற்றவர். இதில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயம் என்னவெனில் விசில் எனும் சிறுவர்கள் விளையாடும் பொருளில் அதனை நுட்பமாகக் கையாண்டு பாடல் ஒன்றை இந்த வாத்தியக் கச்சேரி முடிவில் வாசித்துக் காட்டியமையாகும்.

கலாபூஷணம் ஜீவம் ஜோசேப் அவர்கள் தனது உயர் கல்வியின் பின்னர் இசை ஆசிரியராக முதலில் 1972ம் ஆண்டு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும், பின்பு ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்திலும் பணியாற்றியுள்ளார். அதன் பின்னர் 1974ம் ஆண்டிலிருந்து புனித மிக்கேல் கல்லூரியில் இசை ஆசிரியராகக் கடமையாற்றினார்.

இசைக்கலைஞரான ஜீவம் ஜோசேப் அவர்கள் பல இசைக் கலைஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். இன்று வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் பிரபல்ய கலைஞர்களாகத் திகழ்கின்ற வனஜா ஸ்ரீனிவாசன், நிலாமதி, மகேந்திரன், மகிந்தகுமார், சுஜிவா, கோகிலா தேவநாயகம் போன்ற பலரை இவர் உருவாக்கியுள்ளார். அதுமட்டுமன்றி வெளிநாட்டைச் சேர்ந்த பலரும் கர்நாடக இசை, புல்லாங்குழல் போன்றவற்றைப் பயின்று சென்றுள்ளனர்.

இசை நாடகங்கள், வில்லுப் பாட்டு போன்ற நிகழ்ச்சிகளைத் தயாரித் திருக்கிறார். புனித மிக்கேல் கல்லூரியில் முற்றிலும் வெண்கல இசைக்கருவிகளைக் கொண்ட 'பாண்டு' வாத்தியக் குழுவை அமைத்து இலங்கையில் முதன் முதலில் நடைபெற்ற சர்வதேச மாநாடு, இலங்கை குடியரசு பெற்ற நிகழ்வு, எக்ஸ்போ கண்காட்சி ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளார். முற்றிலும் சாஸ்திரிய இசையைக் கொண்ட கலாசார இன்னியம் ஒன்றை நாதஸ்வரம், தவில், புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளைக் கொண்டு உருவாக்கி இலங்கையிலேயே உண்டாக்கப்பட்ட முதல் தமிழ் கலாசார 'பாண்ட்' வாத்தியக்குழு என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளார். 1999 இல் கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்மொழித்தின விழாவில் இந்த கலாசார 'பாண்ட்' பங்கு கொண்டு அதற்காக கல்வியமைச்சின் செயலாளரினால் திரு.ஜீவம் ஜோசேப் அவர்களுக்கு விருதும் வழங்கப்பட்டது. இவ்விருது இவர் இசை ஆசிரியராகக் கடமையாற்றிய மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளது. பல தமிழ்த்தினப்போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் பல வெற்றிகளை இக்கல்லூரி பெறுவதற்குக் காரணம் ஜீவம் ஜோசேப் அவர்களே. புனித மிக்கேல் கல்லூரி மட்டுமல்ல மட்டக்களப்பிலுள்ள சிவானந்தா வித்தியாலயம், சிசிலியா மகளிர் தேசிய பாடசாலை, மற்றும் வந்தாறுமூலை, வாழைச்சேனை போன்ற இடங்களிலுள்ள பாடசாலைகளில் எல்லாம் 'பாண்ட்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியக் குழுவின் வளர்ச்சிக்கு இவர் பணியாற்றியுள்ளார்.

மட்டக்களப்பில் தனது சகோதரர்களுடன் இணைந்து 'ஜீவம் இசைக்குழு' அமைத்து இசைக் கச்சேரிகள் நடாத்தியவர். பிற்காலத்தில் மட்டக்களப்பில் ஜெயம் இசைக்குழு, ஆதவன் இசைக்குழு போன்றவை உருவாவதற்கு ஜீவம் இசைக்குழுவே முன்னோடியாக அமைந்தது. வடக்கு, கிழக்கில் கிளாரினட்டில் கர்நாடக இசைக் கச்சேரி செய்தவர் ஜீவம் ஜோசேப் மட்டுமே. வயலின், கிளாரினட், சக்ஸபோன், புல்லாங்குழல், மெண்டலின் போன்ற இசைக் கருவிகளைக் கொண்டு கர்நாடக இசைக்கச்சேரி செய்தது இதுவரை எவரும் செய்யாத சாதனை.

பல கிறிஸ்தவ வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்திருக்கிறார். இதைவிட 'இரவினில் வந்தார்' (மேடை நாடகம்), 'அணைக்கும் கரங்கள்' (இசைச்சித்திரம்) நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளார். கோயில்களில் பாடுவதிலும் பாடல் பயிற்சிகளை வழங்குவதிலும் ஈடுபட்டவர்.

மட்டக்களப்பு புனித கப்பலேந்தி அன்னை ஆலயப்பாடல் குழு இவருடைய பொறுப்பிலேயே இருந்தது. 'அணைக்கும் கரங்கள்', 'கப்பலேந்தி கானங்கள்' எனும் கிறிஸ்தவப் பாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்கள் இவரால் வெளியிடப்பட்டுள்ளன. 'காலக்குயில்' என்ற ஒலி நாடாவுக்கு இசை இயக்கம் செய்துள்ளார்.

மட்டக்களப்பு நாட்டியக்கச் சேரிகளின் சிறப்புக்கு ஜீவம் ஜோசப் அவர்களின் பக்கவாத்திய இசையும் முக்கிய காரணமாகும். இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த திருமதி.உமா ஆனந்த அவர்களின் மாணவியின் அரங்கேற்றத் திற்கு ஜீவம் ஜோசப் அவர்களே இசை வழங்கியிருந்தார்கள். தனிக்கச்சேரி, குழு நடனங்கள், கிராமிய நடனங்கள், நாட்டிய நாடகங்கள் எந்த நிகழ்ச்சி எனினும் இவரது வாத்திய இசையினால் மெருகூட்டப்படுவதைக் காணலாம். நடனமா? அதன் இசையா? சிறப்பாகவுள் ளது என பார்வையாளரைச் சிந்திக்க வைப்பதாக இவரது இசை அமைந்தி ருக்கும்.

இவர் பல வாத்தியங்களை வாசிப்பதில் தேர்ந்தவராதலால் எந்த நடனத்திற்கு எந்த வாத்தியத்தை வாசித்தால் சிறப்பாக இருக்கும் என அறிந்து தேர்ந்தெடுத்து வாசித்து அந்த நடன நிகழ்ச்சியை மேலும் அழகுபடுத்துவார். நாட்டியத் திற்காக ஜீவம் ஜோசப் அவர்கள் ஆற்றிய பணி மட்டக்களப்பில் அனைத்துக் கலைஞர்களாலும் பாராட்டப்படுகிறது. குறிப்பாக மட்டக்களப்பு 'பரதகலாலயா' நிறுவனத்தின் நடன நிகழ்ச்சிகளுக்குக் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக இசை வழங்கி வந்தார்.

1995, பரதகலாலயாவின் நடனாஞ்சலி நிகழ்வில் கழுகும் மயிலும் சண்டையிடும் காட்சியான தனி ஆவர்த்தனம் நிகழ்வுக்கு மிகவும் திறம்பட இசையமைத்து ரசிகர்களைத் தன் இசையினால் கட்டிப்போட்டவர். இதே போல குறத்தி நடனப் பாடல் ஒன்றும் இவர் இசையமைத்துப் பாராட்டைப் பெற்றது. செவ்விந்தியர் நடனப்பாடல் ஒன்று திரு.செளந்தரராஜன் (முன்னாள் அதிபர், மட்/இந்துக்கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் எழுதப்பட்டு ஜீவம் ஜோசேப் அவர்களால் இசையமைக்கப்பட்டது. 'செந்தீப்பந்தச் சுடர்களை ஏந்தி' எனும் இப்பாடல் நடனம் மிகவும் பாராட்டைப் பெற்று பல மேடைகளில் ஆடப்பட்டது. இதை விட 'செங்கதிரோனே' எனும் கலச நடனப்பாடல், 'பலே பலே' பஞ்சாப் நடனப்பாடல் போன்ற எண்ணிலடங்காத பாடல்கள் இவர் இசையமைத்து மிகவும் பாராட்டுப் பெற்ற பாடல்களாகவும் நடனங்களாகவும் விளங்குகின்றன. மேலும் பல நாட்டிய நாடகங்களுக்கும் திறம்பட இசையமைத்து அதை மேடையேற்றும் வரையிலும் ஒத்துழைப்புத் தந்து நிகழ்ச்சிகளின் தராதரம் அறிந்து அடக்கமாகப் பெருமை பெறும் ஒரு நிறை குடமான கலைஞர். இவர் இசையமைத்த நாட்டிய நாடகங்களில் **'அமிர்தசாகரம்'** (1985), **'அனுசூயா'** (2000), **'துருபதன் சரிதம்'** (1999), **'விடைகொடு தாயே'** போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஜீவம் ஜோசேப் அவர்கள் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மேலைத்தேய வாத்தியங்களின் இசை பற்றிய விரிவுரைகளையும் நிகழ்த்தியுள்ளார். இவர் இயற்றிய பாடல்கள் பாடசாலை சங்கீத பாடத்திட்டத்திலும் இடம் பெற்றுள்ளன. **'சங்கீத வீணை.....'**, **'மண்ணை நம்பி.....'** ஆகிய பாடல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

**பெற்ற பட்டங்களும் கௌரவங்களும்:**

- பல்லிசைக் குரிசில் - மட்/தமிழ்க்கலாமன்றம் (1964)
- தங்கப்பதக்கம் - அமுதம் - கொழும்பு 'அமுதம்' பத்திரிகை (1963)
- பொன்னாடை கௌரவம் - மட்/சங்கீத சபா (1972)
- கலைஞர் கௌரவம் - வடக்கு – கிழக்கு மாகாண இலக்கிய விழா (1995)
- Merit Award - Rotary Club of Batticaloa (1975)
- உலக தொடர்பு தின விருது - மட் /சமூகத்தொடர்புகள் நிலையம் (1995)
- கலைஞர் கௌரவம் - மட் /மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை (1997)
- கலாபூஷணம் விருது - கலாசார அலுவல்கள் திணைக்களம் (1998)
- இசைஞானி விருது - மட் /புனித மிக்கேல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (1998)
- 'இன்னிசை வேந்தன்' - பட்டமும் பாராட்டும் மட்/புனித மிக்கேல் பழைய மாணவர் சங்கம் (1998)
- கலாசார 'பாண்ட்' இசைக்காக விருது- அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவில் (1999)
- விருதும் பாராட்டும் - மட் /புனித சிசிலியா பெண்கள் பாடசாலை (1999)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ 'இசைப்பேரொளி' பட்டம் - மட் /கல்வித்திணைக்களம் (1999)
- ❖ சமாதானப்பாடலுக்கான விருது - மட் /எகேட் நிறுவனம்
- ❖ கலைஞர் கௌரவம் - மட்டக்களப்பு மாவட்டக்கலை இலக்கியப் பெருவிழா – 2007
- ❖ கௌரவ விருது - கிழக்குப்பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்தர் நினைவு தின விழா (2008)
- ❖ கலைஞர் கௌரவம் - கலாசார அலுவல்கள் திணைக்களம், மட்/மாவட்ட கலாசார பேரவையும்
- ❖ 'தேனககலைச்சுடர்' - மட்/மண்முனை வடக்குப்பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை முத்தமிழ் விழா (2010)
- ❖ 'சுஸ்வரகான நிபுண' ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் மயிலம்பாவெளி சிறப்பு விருது – (2012)
- ❖ Certificate of Achievement – Honouring of achievers Municipal Council, Batticaloa in collobration with Sri Lanka Broadcasting Corportation (2012)
- ❖ A testimonical of sincere apprecication Past Pupils Association St/Michael's College Batticaloa (North America) (2012) Canada

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவனான திரு.ஜீவம் ஜோசேப் அவர்கள் அக்கல்லூரியிலே இசை ஆசிரியராகக் கடமையாற்றி உப அதிபராக உயர்வு அடைந்து ஓய்வு பெற்றார். ஜீவம் ஜோசேப் அவர்கள் இசைக்கலைஞர் மட்டுமல்ல ஒரு சிற்பக் கலைஞரும் கூட. புனித மிக்கேல் கல்லூரியின் முன்னை ஸ்தாபகர் வண.பொணல் அடிகளாரின் உருவச் சிலையையும் தற்போது மட்டக்களப்பு நகரின் மத்தியில் காட்சிதரும் திருவள்ளுவர் சிலையையும் வடித்தவர் இவரே.

பாடலை எழுதவும் - மெட்டமைத்து இசைகூட்டவும் - பாடவும் என பன்முக ஆற்றல் படைத்து மட்டக்களப்பின் இசைத்துறை முன்னோடிகளுள் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்கிய ஜீவம் ஜோசேப் அவர்களின் மறைவையொட்டிக் கவிஞர் காசி ஆனந்தன் வடித்த அஞ்சலிப் பா வரிகளில் கூறியுள்ளபடி, ஜீவம் ஜோசேப் அவர்களின் விரலும் இசைத்தது! குரலும் இசைத்தது!

***செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன், (ஆசிரியர், "செங்கதிர்"***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணன் ஒரு சகாப்பதம்

## ஜீவம் சகோதரர்கள்.

அந்த நாட்களில் வெளிவந்த "ஸ்ரீவள்ளி" திரைப்படத்தில் பிரபல சினிமா நடிகர் T.R.மகாலிங்கத்தினால் பாடப்பட்டு, நடிக்கப்பட்ட பாடல் "காயாத கானகத்தே நின்றுலாவுநற் காரி கையே" என்னும் பாடலாகும். முழுக்க முழுக்க கர்நாடக சங்கீதப் பாணியிலே இசையமைக்கப்பட்ட அப்பாடல் அக் காலத்தில் மிகப் பிரபலமாகப் பேசப்பட்டது. எங்கள் வீட்டில் இருந்த கிராமபோனில் (gramophone) கேட்ப தற்காக அடுக்கடுக்காக வைக்கப்பட்டி ருந்த இசைத் தட்டுகளுள் இதுவும் ஒன்று. ஜீவ அண்ணனுக்கு அப்போது 8 அல்லது 9 வயது இருக்கும். இந்த இசைத்தட்டை அடிக்கடி கிராமபோனில் போட்டுக் கேட்டு T.R.மகாலிங்கம் போலவே அவர் பாடக்கற்றுக்கொண்டார். சில வேளைகளில் வீட்டிலிருந்து ஒலிக்கும் இப் பாடல் கிராமபோனில் தான் ஒலிக்கிறது என்று நினைத்தால் அது தப்பாக இருக்கும். அதை எங்கள் மூத்த சகோதரர் ஜீவம் தான் பாடிக்கொண்டிருப்பது பின்னர் தான் தெரியவரும். அந்த அளவுக்கு உச்ச ஸ்தாயியில் சுருதி பேதமின்றி பாடப் பயிற்சி பெற்றிருந்தார்.

எமது அமிர்தகளிக் கிராமத்தைச் சேர்ந்த எத்தனையோ பெரியோரும், சிறியோரும் இப் பாடலை அவர் பாடிக்கேட்க எமது வீட்டுக்கு வந்து சென்றனர். அவருக்கு தன்னம்பிக்கை யையும் தைரியத்தையும் கொடுத்த பாடல் அதுவாகும். இப்போதும் கூட இப் பாடல் எங்கு ஒலித்தாலும் அவர் நினைவுதான் எங்களுக்கு வந்து செல்லும். அமிர்தகளியிலுள்ள எதிர்மன்னசிங்கம் வீதியால் செல்லும் போதும் எமது சகோதரனின் ஞாபகம் வந்து செல்லும். காலஞ்சென்ற எதிர்மன்னசிங்க அம்மாச்சி எமது நெருங்கிய உறவினர். ஜீவத்தின் கர்நாடக சங்கீதப் பாடல்களைக் கேட்பதற்கென்றே வெகுதூரத்திலிருந்து நடந்து எமது வீட்டுக்கு வருவார். வீட்டு முற்றத்தின் வெள்ளை மணலில் ஒரு துண்டை விரித்து, அதன் மேல் ஒரு பக்கமாக கையை ஊன்றிச் சாய்ந்து படுத்துக்கொண்டே எமது சகோதரன் பாடும் M.K.தியாகராஜா பாகவதர், P.U.சின்னப்பா, M.S.சுப்புலெட்சுமி, U.R.ஜீவரெத்தினம், M.K.பட்டம்மாள், K.P.சுந்தரம்பாள் ஆகியோரின் பாடல்களைக் கேட்டுக்கொண்டே ரசிப்பார். இடையிடையே அவரும் சேர்ந்து கொண்டு பாடுவதை நாங்கள் சுற்றியிருந்து கேட்போம்.

எங்கள் குடும்பம் பெரியது. ஐயா (எமது தந்தை), அம்மா, ஏழு ஆண் சகோதரர்கள், ஒரு அக்கா, ஒரு தங்கை. எமது பெற்றோரும் நன்றாகப் பாடுவார்கள். நாங்களும் பாடுவோம். எனவே நாங்கள் பாட்டிலேயே வளர்ந்தோம், வளர்க்கப்பட்டோம். ஐயாவிடம் ஓர் ஆர்மோனியப் பெட்டி இருந்தது. இரு கைகளாலும் மிக லாகவகமாக அதை வாசித்துக்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவார். எங்களையும் பாடச் சொல்வார். அவர் எங்கள் படிப்பையும் கவனித்துக் கொண்டார். அதில் அவர் கண்டிப்பாகவும் இருந்தார்.

பிற்காலத்தில் எமது பங்குத் தந்தையாக இருந்த வண. F.X.மேயர். யே.ச. அடிகளார் புனித மிக்கேல் கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்த போது, காலஞ்சென்ற எமது சகோதரர் டாக்டர் ஞானப்பிரகாசம் அவர்களினால் ஒரு வெண்கட்டியில் (Chalk) செதுக்கப்பட்டிருந்த அன்னை மரியாளின் ஒரு சிற்பத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார், அமெரிக்காவுக்கு சென்ற போது கூடவே அச் சிறிய சிற்பத்தையும் எடுத்துச் சென்றிருந்தார். அதனைக் கண்ணுற்ற அவரின் நண்பர் ஒருவர் சிலை செதுக்கும் கருவிகள், வண்ணங்கள் போன்ற பல பொருட்களுடன் ஒரு பிளாஸ்ற்றிக் புல்லாங்குழலையும் எமது சகோதரருக்கு பங்குத்தந்தை மூலம் பரிசாக அனுப்பியிருந்தார். வெள்ளை நிறமான அந்தப் புல்லாங்குழலை டாக்டர் அண்ணன் ஜீவத்துக்கு பரிசளித்தார். ஜீவத்தின் கையில் கிடைத்த முதல் இசைக்கருவி அந்தப் புல்லாங்குழல்தான். அந்த குழலுக்கு ஓய்வே இருக்கவில்லை. தானாகவே பல வகையான இராகங் களை இசைக்கக் கற்றுக்கொண்டார். எங்கள் வாய்ப்பாட்டுக்குத் துணையாக புல்லாங்குழலும் சேர்ந்து கொண்டது.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் வசித்து வந்தது. அந்த வீட்டிலிருந்த ஒரு பெரியவர் எங்கள் பாட்டுக்களால் மிகவும் கவரப்பட்டார். அவருடைய உண்மையான பெயர் எவருக்குமே தெரியாது. "றப்பியல்" என்றே எல்லாரும் அவரை அழைத்தார்கள். றப்பியல் அங்கிள் எங்கள் நண்பர் ஆனார். மட்டக்களப்பு கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் அவர் பணிபுரிந்து வந்தார். மட்டக்களப்பு நகரத்தில் ஒரு சிறிய விருந்துபசார வைபவம் இருப்பதாகவும் அதற்கு எங்கள் பாட்டும் உதவியாக இருக்கும் எனக கூறி எங்களையும் அழைத்தார். முதலில் நாம் தயங்கினோம். ஆனாலும் அவர் எங்களை விடவில்லை. ஐயா, அம்மா ஆகியோரிடம் அனுமதியையும் பெற்றுக்கொண்டு ஒரு பின்னேர பஸ்ஸில் எம்மை ஏற்றிக் கொண்டு அந்த இடத்துக்கு எம்மை அழைத்துச் சென்றார்.

அங்கு சென்ற பொழுதுதான் விடயம் புரிந்தது, அது விருந்துபசார நிகழ்ச்சி அல்ல, ஒரு பிரிவுபசார வைபவம். பிற்காலத்தில் செனட்டர் மாணிக்கமாக விளங்கிய கூட்டுறவு ஆணையாளர் ஓய்வுபெற்றுச் செல்வதை யொட்டி ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஒரு பெரிய வைபவம், லேடி மன்னிங் வீதியில் அந்த அலுவலகம் அமைந்திருந்தது. ஒரு பெரிய மேடையும் அமைக்கப்பட்டி ருந்தது. அதில் எங்கள் கச்சேரியா? எங்களுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. அதற்கும் ஒரு காரணம் இருந்தது. அந்தப் புல்லாங்குழல் தான் எங்களிடமிருந்த உருப்படியான ஒரேயொரு வாத்தியம். என்னிடமிருந்தது அம்மா தண்ணீர் எடுப்பதற்கு பாவித்த ஒரு வெண்கலக் குடம். தம்பிமாரிடமிருந்தது சில கரண்டிகளும் கம்பித்துண்டுகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமே எங்கள் கச்சேரிதான். பயந்து கொண்டே மேடையில் சென்று அமர்ந்து கொண்டோம். கச்சேரியை எப்படி ஆரம்பிப்பது என்று ஆளுக்கு ஆள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே புல்லாங்குழல் ஒலி காற்றிலே தவழத் தொடங்கியது. சபையிலே ஒரு அமைதி. பாடலோ "காற்றினிலே வரும் கீதம்" மகுடி இசைக்கு மயங்கிய பாம்பு போல் வந்திருந்தவர்கள் அசைவற்றிருந்தார்கள். குழலிசை முடியும் முன்னரே மண்டபம் நிறைந்த கரகோஷம். பிறகென்ன? ஜீவம் சகோதரர்கள் தங்களுடைய முதலாவது கச்சேரியை வெற்றியுடன் முடித்துக் கொண்டார்கள். கச்சேரி முடிந்ததும் எல்லோரும் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு விருந்தும் போட்டு அனுப்பி வைத்தார்கள். நகர மக்களுக்கு நாங்கள் அறிமுகமாகிய முதலாவது சந்தர்ப்பம் அதுவாக அமைந்தது. றப்பியல் அங்கிளுடைய முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி. எதையோ சாதித்துவிட்டோம் என்ற பெருமை அவரிடத்தில். இந்தியாவின் இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த வலம்புரி என்பவர் சைக்கிள் ஓட்டச் சாதனை ஒன்றை ஏற்படுத்துவதற்காக மட்டக்களப்பு முற்றவெளிக்கு வந்திருந்தார். சைக்கிள் கைப்பிடியில் (Handle) பின்னோக்கி இருந்து கொண்டே இரவு பகலாக தொடர்ந்து ஐந்து நாட்கள் ஓடி முடிக்கும் ஒரு சாதனை. ஓட்டம் ஒரு பின்னேரம் ஆரம்பமாகியது. அதைப் பார்க்க மக்கள் வெள்ளம் கூடியது. ஒலித்த பாட்டுக்களுக்கு ஆடிக்கொண்டே மூன்று தினங்கள் ஓடி முடித்தார். நான்காவது நாள் அவர் மிகவும் களைத்துப் போயிருந்தார். தூக்கமும் அவரைப் பிடித்துக்கொண்டது. நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தவர்கள் சாதனையை அவர் ஏற்படுத்தியே ஆகவேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே தான் சில வாலிப நண்பர்கள் வீட்டுக்கு ஜீவத்தைச் சந்திக்க வந்தார்கள். எப்படியாவது அவரை தூங்க விடாது விழித்திருக்க வைக்கவேண்டிய பொறுப்பு ஜீவத்துக்கு வழங்கப்பட்டது. இரண்டு நாட்கள் வலம்புரிக்கு பின்னே வாத்தியக் கருவிகளுடன் நாமும் ஓடி ஓடிச் சென்று வாத்தியம் இசைத்தும் பாடியும் அவரைத் தூங்கவிடாதுபண்ணி சாதனையை ஏற்படுத்தத் துணைசெய்தோம். நகர மக்களுக்கு நாங்கள் அறிமுகமாகிய இரண்டாவது சந்தர்ப்பம் அதுவாக அமைந்தது.

இந்த நிகழ்வில் தான் ஜீவத்துக்கு சில வாலிபர் நண்பர்களானார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பின்னாளில் மாநகரசபை முதல்வராக இருந்த காலஞ்சென்ற செழியன் பேரின்பநாயகம், மட்டக்களப்பின் அதிசிறந்த நகைச்சுவை நடிகர் காலஞ்சென்ற "நண்டு" நவரெட்ணம், "கரண்ட்" செல்வம், மத்தியூஸ், கருணைரெட்ணம், ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் ஜெயச்சந்திரா, கிருபைராசா, ஜோர்ஜ், சண்முகராசா, கா.ஹுசைன் முக்கியமாக யூசுப் சாகிப் ஆகியோரைக் குறிப்பிடலாம். நண்பர்கள் ஒன்று சேர்ந்து தொடங்கியதுதான் மட்டக்களப்பின் புகழை ஈழம் எங்கும் பரப்பி, எண்ணற்ற சாதனைகளை ஏற்படுத்திய மட்டக்களப்பு தமிழ்கலா மன்றம் ஆகும். மன்றத்தின் கலைப் பிரிவுப் பொறுப்பை சகோதரன் ஏற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவம் சகோதரர்கள் மன்றத்தின் இசைக்குழுவானார்கள். இக் காலப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேலான இசைக் கச்சேரிகளை இலங்கையின் பல பகுதிகளிலும் நடாத்தினோம். இசையில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு **"கண்ணன் கோஷ்டி"**, திருகோணமலைக்கு ஒரு **"பரமேஸ் - கோணேஷ் இசைக்குழு"**- என்று இருந்த காலத்தில் மட்டக்க ளப்புக்கு ஒரு **"ஜீவம் சகோதரர்கள்"** என்ற பெருமையை ஏற்படுத்தினார் ஜீவம் சகோதரர்.

உலகிலேயே முதன் முதலில் சுவாமி விபுலானந்தருக்கு ஒரு சிலை வைத்த பெருமை மட்டக்களப்புத் தமிழ்க்கலாமன்றத்தையே சாரும். இந்தச் சிலையை செதுக்கியவர் எங்களது மூத்த சகோதரர் டாக்டர் ஞானப்பிரகாசம் ஆகும். மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு முன்னால் நிறுவப்பட்ட அந்த சிலையை வடிக்க வலது கையாகச் செயற்பட்டவர் ஜீவம் ஆவார்.

அண்ணணின் பணிப்புரைக் கேற்ப சிலையில் திருத்தங்களை அவர் செய்து முடிப்பார். பல நாட்கள் இருவரும் இணைந்து மிக தத்ரூபமான முறையில் அந்தச் சிலையை வடித்து முடித்தார்கள். மிகப் பிரமாண்டமான ஒரு நிகழ்ச்சியில் சிலைதிறப்பு விழா நடை பெற்றது. அந்த விழாவிலும் ஜீவம் அண்ணன் தலைமையில் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ஜீவம் அண்ணன் சம்பந்தப்பட்ட மட்டில் இந்தக் கால கட்டம் முக்கியமாக அமைந்திருந்தது. திரையுலகத்தைச் சேர்ந்தவர்கள் முன்னிலையில் எங்கள் இசை நிகழ்ச்சிகள் பல இக் காலப்பகுதியில் நடைபெற்றன. குறிப்பாக 1960களில் பிரபல சினிமா நட்சத் திரங்களான S.S.ராஜேந்திரன், அவரின் மனைவி நடிகை விஜயகுமாரி ஆகியோருக்கு பதுளை மாநகரில் நடைபெற்ற பிரமாண்டமான வரவேற்பு நிகழ்ச்சியில் ஜீவம் சகோதரர்களின் இசைநிகழ்ச்சி முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

"நானும் ஒரு பெண்" படத்தில் விஜயகுமாரி பாடுவதாக அமைந்திருந்த "கண்ணா கருமை நிறக் கண்ணா உன்னைக் காணாத கண்ணில் லையே" என்ற பாடலை எங்கள் இசையில் ஈழத்தின் பிரபல பாடகி வனஜா ஸ்ரீனிவாசன் பாடிய போது இலட்சிய நடிகர் தம்பதிகள் உட்பட முழு ரசிகர் கூட்டமே பலத்த கரகோஷம் செய்து எங்களை உற்சாகப்படுத்தினர். விழாவின் இறுதியில் பேசிய நடிகர் ராஜேந்திரன், அண்ணனையும் இசைக் குழுவின ரையும் பாராட்டிப் பேசியதை மறக்க முடியாமலுள்ளது.

பாரதி விழாவில் பங்குபற்று வதற்காக கவிஞர் கண்ணதாசன் ஒரு முறை மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தார். நகர மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றினார். அவர் பேசுவதற்கு முன்னதாக பாரதியாரின் இரண்டு பாடல்களை அவரின் முன்னால் பாடும் சந்தர்ப்பம் எங்களுக்குக் கிடைத்தது. "மங்கியதோர் நிலவினிலே", "சிந்து நதியின் மிசை நிலவினிலே" ஆகிய இரண்டு பாரதி யார் பாடல்களை சகோதரனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து நாங்கள் பாடியதைக் கையைத் தட்டிக்கொண்டே வெகுவாக ரசித்த கவிஞர், தன்னுடைய உரையிலே எங்களை வெகுவாகப் பாராட்டினார். அவரின் சொற்பொழிவின் இடையிலே **"ஜீவன் சகோதரர்கள் இசைத்த பாரதி பாடலில் வந்தது போல சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்"** என்ற வரிகளை நினைவூட்டியும் பேசினார்.

மறைந்த இசை மாமேதை பிரபல பின்னணிப் பாடகர் T.M.சவுந்தரராஜனுக்கு தமிழ்க் கலாமன்றத்தினர் நகர மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த பெருவிழாவில் நமது சகோதரன் முக்கிய பங்கினை வகித்தார். அவருடன் நீண்ட நேரம் பேசவும், அவருடன் விருந்துண்ணவும் அவருக்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. அண்ணன் அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டதை பெருமையுடன் கூறுவார். வீட்டில் மாட்டப்பட்டிருந்த அந்தப் படம் சுனாமிப் பேரலையால் உருக்குலைந்துவிட்டதை எண்ணி மிகவும் மனம் வருந்தினார். இந்தக் காலப் பகுதியில் தான், (1966) மீன் மகள் பாடத் தொடங்கினாள்.

வாவிமகளும் ஆடத் தொடங்கினாள். மட்டு நகரின் புகழ் எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது. அமிர்தகளி ஸ்ரீமாமாங்கப் பிள்ளையார் தீர்த்த உற்சவத்தை நேரடி ஒலிபரப்பு செய்வதற்கென இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி நாவற்குழியூர் நடராசன் தலைமையில் ஒரு குழு மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தது. **"லண்டன் கந்தையா"** புகழ் "சானா" சண்முகநாதன், அப்துல் கபூர் போன்ற பிரபல ஒலிபரப்பாளர்களும் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். தீபாவளி தினத்தன்று ஒலிபரப்புவதற்காக ஒரு தீபாவளிக் கலைநிகழ்ச்சியை நடாத்தி அதை ரசிகர்கள் முன்னிலையில் ஒலிப்பதிவு செய்ய அவர்கள் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் மட்டக்களப்பின் சிறப்பை எடுத்துக் கூறும் ஒரு தொடக்கப் பாடலை ஒலிபரப்ப விரும்பிய அவர்கள் எம்மை அணுகி தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். காசி ஆனந்தன் என பிரபலமாக அழைக்கப் படும் எம் உறவினரான அண்ணனை நாம் சென்று சந்தித்து நாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எங்களுக்காக எழுதிக் கொடுத்த பாடல்தான் **"மீன் மகள் பாடுகிறாள்".**

இப்பாடலுக்கு ஜீவம் அண்ணனுடன் சேர்ந்து அவசர அவசரமாக இசையமைத்தோம். இசையமைப்பு பலரும் பாராட்டும் வண்ணம் பிரமாதமாக அமைந்தது. அந்தப் பாடலை நானும் எனது இளைய சகோதரன் ஞானம் யோசேப்பும் பிரபல பாடகர்களாகிய நிலாமதி, மஹிந்தா ஆகியோரின் தாயாரான திருமதி ஏஞ்சல் கருணாரத்தினமும் சேர்ந்து பாடினோம். மட்டக்களப்புக்கு என தேசிய கீதம் ஒன்றும் உருவாகிவிட்டதில் எமக்கும் எமது மக்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. இப்போது மீன் மகள் மட்டக்களப்பில் மட்டுமல்ல உலகம் பூராகவும் பாடுகிறாள். அண்மையில் மட்டுநகரைச் சேர்ந்த ஒருவரின் மரணச் சடங்கு லண்டன் மாநகரில் நடைபெற்றதாம். மரணச் சடங்கின் இறுதியில் மட்டக்களப்பின் தேசிய கீதம் பாடப்படும் என்று அறிவிக்கப்பட்டதாம். **"மீன்மகள் பாடுகிறாள்"** பாடல் ஒலிக்கப்பட்ட போது கலந்துகொண்டவர்கள் அனைவரும் கண்ணீர் விட்டழுதனராம் என்று எனது மாணவன் ஒருவன் தொலைபேசியில் கூறியதை அண்ணன் ஜீவத்திடம் சொன்ன போது அவருடைய கண்களிலும் நீர் பனித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவம் சித்தப்பாவுடனான இனிய நினைவுகள்

**நிவாட் ஞானப்பிரகாசம் - எல்ஜின் ஞானப்பிரகாசம்**

அமரர் கலாபூஷணம், பல்லிசைக் குரிசில், சங்கீத பூஷணம். ஜீவம் யோசப் அவர்கள் எங்கள் தந்தையார் அமரர் டாக்டர் ஜே.ஏ.ஞானப்பிரகாசம் அவர்களின் இளைய சகோதரர் என்ற பெருமையோடு ஜீவம் சித்தப்பாவுடனான எங்களது சில இனிய நினைவுகளை பகிர்ந்துகொள்கின்றோம்.

ஜீவம் சித்தப்பா, நீங்கள் எங்களை சிறுபராயத்தில் ஒரு சிறிய தந்தையாக சீராட்டி வளர்த்ததை அன்புடன் நினைவு கூறுகின்றோம். சிறுபராயத்தில் ஜீவகானம் இசைக் குழுவில் நாங்கள் பாடியதன் ஊடாக எங்களை முதல் முதலில் இசை மேடையில் ஏற்றியவர் நீங்கள் என்பதை பெருமையோடு நினைவு கூறுகின்றோம். "விபுலானந்தர் வாழ்ந்த நாட்டினிலே, வீணைக் கொடி போட்ட வீட்டினிலே, கவி ஆனந்தன் தந்த பாட்டினிலே காதினில் தேன் வந்து பாயுதடா... அதுவே ஜீவ கானம்!" என்று நீங்கள் இயற்றிய ஜீவ கானத் தொடக்கப்பாடல் இன்றும் எங்கள் உள்ளங்களில் ஒலிக்கின்றது.

நாங்கள் புனித மிக்கேல் கல்லூரியில் படித்த போது நீங்கள் எங்கள் சங்கீத ஆசிரியராக விளங்கியதை பெருமையோடு நினைவு கூறுகின்றோம். இக் கால கட்டத்தில் ஒரு ஆசானாக, ஒரு சிறிய தந்தையாக எங்களுக்கு அறிவுரைகள் கூறி எங்களை வழிநடத்தியதை நன்றியோடு நினைவு கூறுகின்றோம். பாடசாலை நாட்களில் உங்களின் பயிற்றுவித்தலில் புனித மிக்கேல் கல்லூரி பான்ட் (Band) குழுவில் நாங்கள் இடம்பெற்றதை பெருமையோடு நினைவுகூறுகின்றோம். நீங்கள் எங்களுக்கு பல மேற்கத்தேய, கீழைத்தேய இசைக் கருவிகளை பயிற்றுவித்திருக்கின்றீர்கள். மேலும் பாடசாலை நாட்களில் புனித மிக்கேல் கல்லூரி சார்பில் பாடசாலைகளுக்கிடையிலான ஆக்கப்பாட்டுப் போட்டிகளில் தங்கள் பயிற்றுவித்தலில் நாங்கள் பங்குபற்றியதை நினைவு கூறுகின்றோம். இப் போட்டிகளில் புனித மிக்கேல் கல்லூரி அணி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை என ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று பங்குபற்றி முதல் இடத்தைத் தட்டிக்கொண்டது என்பதை பெருமையோடு நினைவு கூறுகின்றோம். யாழ்ப்பாணத்தில் போட்டிகளில் வெற்றி பெற்று நாங்கள் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை வந்தடைந்த போது உங்களுக்கு புனித மிக்கேல் கல்லூரி அதிபராலும் குழுவினராலும் அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பை நினைவு கூறுகின்றோம். இப் போட்டிகளில் நீங்கள் இயற்றிய "இன்று இம் மண்ணில் வாழும் மாணவன் நீ - நாளை இந் நாட்டை ஆளும் மன்னவன் நீ, தன்னலம் அற்ற உந்தன் சேவையினை தாயகம் தேடுதடா நாடுதடா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடல்வரிகள் இன்றும் எங்கள் நெஞ்சைவிட்டகலாதிருக்கின்றது.

நீங்கள் இயக்கி நாங்கள் பங்குபற்றிய **"இரவினில் வந்தவர்"** நாடகத்தை நினைவுகூறுகின்றோம். நீங்கள் சிறப்பாக இயக்கி கலைஞர்களைப் பயிற்றுவித்த இந் நாடகம் பலரதும் பாராட்டைப் பெற்றது.

தங்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட **"கலா பூஷணம்"** பட்டமளிப்பு வைபவத்தில் நாங்கள் தங்களோடு கலந்துகொண்டதையும் அன்றைய நாளை நீங்கள் எம்மோடு மகிழ்வாகக் கழித்ததையும் மகிழ்வோடு நினைவு கூறுகின்றோம். சென்ற ஆண்டு உங்களது **"கப்பலேந்தி கானங்கள்"** இறுவெட்டு வெளியீட்டின் போது எம்மையும் அழைத்து இறுவெட்டை கையளித்து கௌரவித்ததை நினைவு கூர்ந்து பெருமைப்படுகின்றோம்.

நாங்கள் புளியந்தீவில் வசித்த போதும் அமிர்தகளி புனித கப்பலேந்தி அன்னை ஆலயத்தை விட்டு ஒதுங்காமல் தொடர்ந்தும் அவ் ஆலய நிகழ்வுகளில் நாம் பங்குபற்ற நீங்கள் எங்களுக்கு தூண்டுகோலாக இருந்தீர்கள். இறுதி நாட்களில் நீங்கள் எம்மை சந்தித்த போது பிரபல பின்னணிப் பாடகர் T.M.சௌந்தரராஜன் அவர்களின் மறைவு குறித்து மிகவும் கவலைப்பட்டீர்கள். அன்னார் பாடிய கண்ணதாசனின் பாடலின் பின்வரும் வரிகள் உங்களுக்கு மிகவும் பொருந்தும்: **"நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை..."** அமரர்கள் TMS, கவியரசு கண்ணதாசன் வரிசையில் இசையரசு நீங்களும் இப் பாடல் வரிகளுக்குப் பொருத்தமானவராகிவிட்டீர்கள். நீங்கள் அமைத்த பாடல்கள் மூலம் தமிழ் வளர்ந்தது, மட்டுநகர் புகழ் உயர்ந்தது, இறைவனதும் அன்னை மரியினதும் புகழ் பாடப்பட்டது.

அன்பின் ஜீவம் சித்தப்பா தங்கள் பிரிவால் நாங்கள் மிகவும் வேதனைப்படுகின்றோம். நீங்கள் எம்மை விட்டு இறைவனடி சென்றாலும் நீங்கள் என்றும் எங்கள் ஜீவனாய் இருந்து எம்மை வழிநடத்துவீர்கள்.

**"நீலக் கடல் தாலாட்ட நிறையும் வாவிக் கரையினிலே கோலப் பதுமையாய் விளங்கும் கோமளமே ..."** என்று நீங்கள் பாடிய அமிர்தகளி கப்பலேந்தி அன்னையின் மடியில் உங்கள் ஆன்மா இளைப்பாற சங்கீத வீணையில் இசையமைத்து சர்வேஸ்வரனை வேண்டி நிற்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டர்

சங்கீதபூஷணம் திரு.ஜீவம் ஜோசேப் (அருளானந்தம்) ஆசிரியர் அவர்கள் இலங்கை நாட்டின் கிழக்கு மாகாணத்தில் அமைந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் அமிர்தகளி என்னும் அழகிய கிராமத்தில் 30.07.1939 இல் திரு.திருமதி.ஜோசப் தம்பதிகளின் அன்பு மகனாகப் பிறந்தார்.

இவர் இன்னிசை வளர்த்து இயற்கையோடு இசைந்த வாழ்வு வாழ்ந்தவராகும். இவரது இருப்பின் இயற்கைச் சூழல் மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதானதாகும்.

வங்கக்கடலோரம் வடதிசைக் கடற்காற்றினில் சலசலக்கும் தென்னங்கீற்றுகளின் ஓசை, அதிகாலை வேளையில் கீச்சிடும் புட் பறவைகளின் ஒலி. முகத்து வாரக்கடலில் சங்கமிப்பதற்காக ஓடிக்கொண்டிருக்கும் அமிர்தகளி ஆற்றில் துள்ளிக்குதித்து, புரண்டு விளையாடும் கயல் மீன்களின் கூட்டம், கூடத்திற்கும் குரவைக்கும் பெயர் பெற்றதும், பல கலைஞர்களையும் உருவாக்கியதுமான கிராமம். தமிழர் பண்புகளுக்கு தனித்துவமான சிறப்புப்பெற்றதான குடிமக்கள், இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் சிறப்புற நடைபெறும் கிராமம். இவ்வாறான சூழலில் வாழ்ந்தவரே ஜீவம் மாஸ்டர். இது என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டர் .........

ஒரு இனிய நண்பனை, ஒரு நல்ல தமிழ் மகனை இழந்துவிட்ட நிலையில் இருப்பதாக நான் உணர்கின்றேன்.

எனக்கும் ஜீவம் மாஸ்டருக்கும் உள்ள உறவும் - தொடர்பும், பல வேறுபட்ட வலைப்பின்னல்களால் அமையப்பெற்றதாக இருந்தது. அமிர்தகளி புனித கப்பலேந்தி மாதா ஆலய ஆன்மீக செயற்பாட்டுத்தொடர்பு.

மட்டக்களப்பு நகரின் பிரபல கல்லூரியாக விளங்கும் புனித மிக்கேல் கல்லூரியில் 1975 இல் இருவரும் ஒன்றாக நியமனம் பெற்று ஆசிரியராக நான் 15 வருடங்கள் ஜீவம் மாஸ்டருடன் இணைந்த சேவையாற்றிய தொடர்பு.

ஜீவம் மாஸ்டர் இசைத்துறையிலும், நான் நாடகத்துறையிலும், பல மேடைகளை எங்கள் வசமாக்கிய தொடர்பு. இவை திருகோணமலை – மட்டக்களப்பு ஒரே கத்தோலிக்க மறைமாவட்ட மேற்றிராசனமாய் இருக்கையில் மறைக்கல்வியின் வளர்ச்சியின் தேவை கருதி மறைக்கல்வி நடு நிலையத்தினால் திருவிவிலியக் கண்காட்சி ஒன்றை எமது கல்லூரியிலேயே நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அதன் கூடிய பொறுப்புக்களை நானும், ஜீவமும் ஏற்றுக்கொண்டோம். அப்போதைய அதிபர் மறைந்த கலாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் சா.இ.கமலநாதன் அவர்கள் எமக்கும் பூரண ஆதரவு நல்கினார். உயர்தர வகுப்பு மாணவர்களையும், மறை ஆசிரியர்களையும் இணைத்து யேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களைத் தத்ரூபமாக காட்சிப்படுத்தி வெற்றியும் கண்டோம் - இது

**என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டர்.....**

பாடசாலையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் கூடுதலாக எங்கள் இருவரிடமே ஒப்படைக்கப்படும். ஜீவம் மாஸ்டர் Band வாத்தியக் குழுவிற்கும், நான் சாரணர் இயக்கச் செயற்பாட்டிற்கும் இருந்த வேளையில் தமிழ் மொழித்தினச் செயற்பாடுகளுக்கு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களும், இதற்கு மேலாக எமது கல்லூரியில் கற்பித்து மறைந்தவர்களான, சங்கீத பூஷணம் ராஜு மாஸ்டர் அவர்களும், சங்கீத ஆசிரியர் முழக்கம் முருகப்பா அவர்களும், எம்முடன் இணைந்து செயலாற்றுவர். அத்துடன் இல்ல விளையாட்டுப்போட்டிகளையும் வழநடத்தும் பொறுப்பையும் ஏற்று சிறப்பாகச் செய்து முடிப்போம் - இவை

**என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டர் ......**

யுத்த மேகம் கருக்கட்டி பொழியத்தொடங்கியபோது! எமது கல்லூரி மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். ஆயுதக்குழுக்களால் மாணவர்கள் கட்டாய ஆட்சேர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். மாணவர்களின் கல்வி சிதறி சின்னாபின்னமாகியது. மாணவர்கள் பல திசைகளிலும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள துடியாய்த் துடித்தனர். பெற்றோர்கள் ஏங்கித் தவித்தனர். ஒன்றுமறியாத அப்பாவி மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவ்வேளையில் எமது அதிபருடன் நானும், ஜீவம் மாஸ்டர் அவர்களும், பல முகாம்களுக்குச் சென்றோம். சில மாணவர்கள் விடுவிக்கப்பட்டனர். - இவை

**என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டர்......**

நாட்டில் பிரச்சினைகள் முனைப்புப்பெறத்தொடங்கிய காலங்களில் கூட கல்லூரிக்காக, மாணவர்களுக்காக பல தேசிய மட்ட நிகழ்வுகளில் நாம் மாணவர்களைப் பங்குப்பெற வைத்தோம்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற வாத்தியப்போட்டியில் கலந்து கொள்ளச்சென்ற வேளை, பல பிரச்சினைகளை எதிர்நோக்கியே சென்றுவந்தோம்.

இதே போன்று திருகோணமலையில்தான் தமிழ் மொழித்தினப் போட்டியின் மாகாண மட்டப்போட்டியில் நடைபெறுவது வழக்கம். ஒரு தடவை கடும் வெள்ளம், மன்னம்பிட்டியால் புகையிரதத்தில் நாம் சென்று கொண்டிருந்தபோது, நம்பவே முடியாதவாறு யானைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. இந்த நிகழ்வை அடிக்கடி என்னிடம் கதைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவம் மறைவதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் அவரை அவரது வீட்டில் சந்தித்தேன். ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் வரை உரையாடினோம். அப்போது தான் பெற்ற விருதுகள், நற்சாட்சிப்பத்திரங்கள், தன்னைப் பற்றி கனடா வாழ் புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்களால் வெளியிடப்பட்ட சஞ்சிகை – கட்டுரைகள் படங்கள் அத்தனையும் எடுத்து ஒவ்வொன்றாகக் காட்டினார். இவைகள் யாவும்

**என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டர்**

ஜீவம் மாஸ்டரின் புகழ் பூத்த சாதனைகள் இமயமளவிற்கு உயர்ந்துள்ளன. ஜீவத்தின் சுவாசமெல்லாம் இசையானதால் அவர் வாழ்ந்த வாழ்க்கையும் இசையாகவே அமைந்தது. இறை மூர்த்தங்கள் அனைத்தும் இசைக்கலையின் ஆதார வடிவங்களாக விளங்குவதை நாம் காண்கின்றோம்.

கலைவாணியின் கரங்களிலே வீணை, நந்தியம் பெருமானின் கரத்தினில் மத்தளம். நடமாடும் நடராஜப் பெருமானின் கரத்தினில் உடுக்கை, கண்ணபிரானின் கரத்தில் புல்லாங்குழல் இருக்கும். ஆனால் எமது இசைமேதை ஜீவம் மாஸ்டரின் கரங்களில் வயலின், வீணை, புல்லாங்குழல், கிளரினட், கிட்டார், மிருதங்கம், தவில், தபேலா இவ்வாறு எம்மால் அறிந்து கொள்ளத் தெரியாத – புரியாத – காணாத வாத்தியங்கள் வைத்து இசைக்கப்படும். அதுதான் ஜீவன்.

ஜீவம் மாஸ்டரை ஒரு இசை அமைப்பாளராகவும் கண்டோம். எமது மண்ணிலே பிறந்து தனது கவிதை ஆற்றலால் உலகறியப்பட்ட கவிஞர் காசி ஆனந்தன் அவர் தம் உணர்வுகளால் மட்டுநகர் - மட்டக்களப்பைப் பற்றி மாத்திரமல்ல பண்பியல், பாரம்பரியக்கலை பற்றியும் பாடல்.

“மீன்மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்”

என்ற பாடல் இதற்கான இசையமைத்தவர் ஜீவம் மாஸ்டர். பலரது மனங்களில் பதிந்துள்ள பாடல் ஆசிரியர் கலாசாலைகள், கல்வியியற் கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் சுற்றுலாக்குழுவினர் இவ்வாறானவர்களால் பாடப்பட்ட சந்தர்ப்பத்தை நான் நேரில் கண்ணுற்றதுண்டு.

இதற்கு மேலாக நாம் சாரணர் பாசறைகளில் பங்குபற்றியுள்ளோம். தேசிய மட்டத்தில் கண்டி, குருநாகல், விகாரமாதேவி பூங்கா, அம்பாந்தோட்டையில் அங்குளுபலஸ்வெவ, எம்பிலிப்பிட்டிய, திருகோணமலை, மீடிக இவ்வாறு பல பாசறைகள். இப்பாசறைகளில் பாசறைத் தீ நிகழ்வின் போது இப்பாடசாலை நாம் பாடியே தீருவோம். இன, மத, மொழி வேறுபாடு அற்றதான இப்பாசறையில் உள்ள அனைவரும் ஆர்வமாகக் கேட்டு இரசிப்பார்கள். இப்பாடலின் ஒரு வரியினை மாத்திரம் குறிப்பிட்டு விட்டு என்னால் மேற்சொல்ல முடியாதுள்ளது. காரணம் எமது ஜீவம் மாஸ்டரைப் பற்றிய இறுதி ஆவணம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பெரிய சொத்து இதில் இப்பாடலின் முழு வரிகளையும் குறிப்பிட வேண்டியது எனது கடமையும் கூட..

மீன்மகள் பாடுகிறாள்
வாவி மகள் ஆடுகிறாள்
மட்டுநகர் அழகான மேடையம்மா - இங்கு
எட்டுத் திசையும் கலையின் வாடையம்மா

ஏலேலோ....ஏலேலோ

விபுலானந்தன் வாழ்ந்த நிலமம்மா
இது வீணைக்கொடி போட்ட குலமம்மா
ஊருராய் கூத்தாடும் ஊரம்மா – எங்கள்
ஊரினிலே கலைச்செல்வம் நூறம்மா

ஆ.......ஆ.......மீன்

ஓடி வரும் கோயில் தேரிலே
வண்ண ஓவியங்கள் ஆடும் வீதியிலே
பாடிப்பாடி கதிர் அறுப்பார் கவிகளிலே – எங்கள்
பைந்தமிழும் வந்து விழும் செவிகளிலே

ஆ.......ஆ.......மீன்

அம்மானை வசந்தன் கேட்கலையா – நீங்க
அழகான மகுடி பாக்கல்லயா
தேன் மதுரத் தாலாட்டில் உறங்கல்லயா
எங்கள் தேவியரின் வாய்ப்பேச்சில் மயங்கல்லையா

ஆ.......ஆ.......மீன்

ஜீவம் மாஸ்டர் பல பாடல்களை எழுதி இசை அமைத்துள்ளார். இறைவன் மீது புகழ்பாடி அன்னை மரியாள் மீது புகழ்பாடி, இறுவட்டுக்களாகவும் வெளியிட்டவர். இதற்கு அவரது புதல்வர் எமில் பிரியானந்தம் பக்க துணையாக இருந்துள்ளதை அறிகின்றோம்.

ஒரு கவிஞனின் உள்ளத்தை ஈர்ப்பது முருகியல் உணர்ச்சியே என கீற்ஸ் என்ற ஆங்கிலப்புலவர் A THING OF BEAUTY IS A JOY FOR EVER என்று கூறுகின்றார்.

இதே விடயத்தை இதற்கு முன்பு திருநாவுக்கரசர் பெருமான் "உள்ளங்கனிந்த போதெல்லாம் உவந்து வந்து பாடுமே" என்று கூறியுள்ளார்.

இத்தாலி தேசத்தில் உரோமை நகரில் அமைந்துள்ள வத்திகானிலிருந்து வெளிவந்த திருச்சபையின் ஏடு ஒன்றில் "ஒரு முறை இறைவனை நோக்கிப்பாடுவது இரண்டு முறை செபிப்பதற்கு சமமானது என்று கூறியுள்ளது. இதனையே ஜீவம் மாஸ்டர் செய்துள்ளார்.

ஒருவன் பிறக்கும் போது வெறுங்கையுடனே பிறக்கின்றான். அவன் இறக்கும் போது எதையாவது நல்லவற்றை விட்டுச்செல்ல வேண்டும் என்பது அறியப்பட்ட தொன்றாகும்.

எனவே ஜீவம் மாஸ்டர் வெறும் கையோடு பிறந்து அவர் மறையும் போது விட்டுச்சென்றது ஏராளம், ஏராளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையில், சிற்பத்தில், சித்திரத்தில், கல்வியில், சமூக வளர்ச்சியில் அவர் விட்டுச்சென்றவைகள் நாம் அறிந்தவையே. எனவே அவர் விட்டுச்சென்றவற்றை தொட்டுச்சென்று தொடரவேண்டியது அவர் சார்ந்தோரின் கடமையும் கூட.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர்"

என்பது ஔவையார் கூற்று ஆகும். யேசு சாவை வென்றவர், இதை நாம் விசுவசிக்கின்றோம். இந்த விசுவாசத்தின் மூலம் பொதுத்தீர்வை நாளில் உயிர்த்தெழுவோம். ஜீவம் மாஸ்டரின் மண்ணக வாழ்வு முடிந்த முற்றுப்புள்ளியல்ல.

விண்ணக வாழ்வைத் தொடங்கிய அவர் இறையரசில் இறைவன் புகழ்பாடும் இசை வல்முலனாகவே வீற்றிருப்பார். என் மனவானில் என்றும் ஜீவம் மாஸ்டரின் நினைவுகள் வாழந்து கொண்டே இருக்கும். அவரது மனைவி மகன் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஜீவம் மாஸ்டரின் தூய வழிகாட்டலை தொடர்ந்துப்பெற புனித கப்பலேந்தி அன்னை இறைவனிடம் பரிந்துரை புரிவாராக.

***கலைக்கோட்டன் அ. இருதயநாதன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குத் தெரிந்த ஜீவம் அண்ணன்!

ஜீவம் சகோதரர்களின் 'ஜீவகானம்' மட்டக்களப்பில் கொடிகட்டிப் பறந்த காலத்தில்தான் எனக்கு அவரை நன்கு அறியக்கிடைத்தது. மறைந்த எனது தாயார் திருமதி.றோசறி மோசஸ் அவர்களும் 'வயலின்' வாசிப்பிலே மிகவும் சிறந்து விளங்கியவர். அதனால் எனக்கும் இந்த இசை ஆற்றல் மிகவும் பிடித்ததாக இருந்தது. இதனால் 5 பேர் கொண்ட வயலின் வாத்தியக் குழுவை தனது ஜீவம் குழுவில் பழக்கி சேர்த்துக் கொண்டார். நானும் அவருடன் பல மேடைகளில் இவ்விசைக் குழுவுடன இணைந்து கொண்டேன்.

ஜீவம் அண்ணா அக்காலத்தில் பல மேடைகளில் 'கிளறினட்' இசை வழங்குவது வழக்கம். தவிலுடன் சேர்ந்து கிளறினட் மிகவும் அழகாகவும் ,ரசிக்ககூடியதாகவும் வாசிப்பார். மட்/சங்கீத சபாவினால் ஏற்பாடு செய்யும் அனைத்து மேடைகளிலும் இவர் வாசிப்பார். இதைப் பார்த்து ரசிக்க அதிக ரசிகர்கள் அங்கு கூடுவதும் வழக்கமாக இருந்தது. இப்படியான நிகழ்வுகளுக்கு எல்லாம் நான் இவருடனேயே செல்வேன். இதனால் நான் எனது வீட்டில் தங்குவது குறைவாகவே இருந்தது. இதனாலே எனக்கு எனது அம்மா சூட்டிய பெயர் 'ஜீவத்தின் வெற்றிலைப் பெட்டி'

அக்காலத்தில் இவர் நிகழ்த்திய மேடை நிகழ்வுகள் இன்றும் என் மனதில் அப்படியே பதிந்துள்ளது.

பௌர்ணமி நிகழ்வுகளின் வெபர் அரங்கில் ஜீவகானம்
பாட்டாளிபுரத்து மேடையில் ஜீவகானம்
எமது மாநகரசபை மண்டபத்தில் ஜீவகானம்
இந்துக்கோவில்களிலும் ,கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஜீவகானம்

இதேபோன்று பல நாடகங்கள் :
கறுப்பு றோஜா
பலிக்களம் (புனித செபஸ்தியார் ஆலய வளவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைக்கும் கரங்கள் (மாநகரசபை மண்டபம் - சிலைட்ஸ் சோ) இதில் வரும் பாடல் : அணைக்கும் கரங்களே........, சிலுவை மரம், கல்வாரிக் காட்சி தெரிந்திடுதே, தாயம் சேயும் சந்திக்கு, இப்படிப் பல பாடல்கள் எமது நெஞ்சில் நிலைத்து இருக்கின்றது.

இவர் மேடையில் இயற்றியப் பாடிய பாடல்கள் சில :

(1) கோட்டமுனைப் பாலத்திலே கச்சான் காற்றாடி. நீ கொட்டாஞ்சட்டை போட்டுகின்னு போவதேனடி....................

(2) வாத்தியாரையா வாத்தியாரையா வழிக்காட்டி நீங்களல்லவா வழிதவறிப் போகலாகுமா....................................

(3) மச்சாளே மாம்பழமே ,மாமிபெத்த ஓவியமே.........................................

(4) ஆலயடிச் சோலையடா! அருமையான சூழலடா! ஆடி அடங்கும்....................................

(5) மீன்மகள் பாடுகிறாள்...........................

இவர் பலரை அடையாளம் கண்டு அவர்களிடமிருக்கும் பாடும் கெட்டித்தனத்தை அறிந்து, அவர்களைப் பயிற்றுவித்து மேடையேற்றியுள்ளார். இப்படி மேடையில் பாடியவர்கள் இன்று கொழும்பிலே பல பிரபல்லியமான பாடகர்களாக இருக்கின்றனர்.

இவரது ஜீவகானத்தில் பாடல் பாட பலபெரும் பாடகர்களுக்கு மிகவும் ஆசை அதில் மறைந்த திரு.பேடினல் லோப்பஸ், பிரபல பின்னணிப் பாடகர் ஸ்டனி சிவனாந்தன், மலர்வேந்தன், இப்படிப் பலரை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவர் அண்மைக் காலத்தில் மட்டக்களப்பு கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தினரால் தயாரித்து, வழங்கிய பிரமாண்டமான நாடகமாகிய புனித இஞ்ஞாசியாரின் வாழ்க்கை வரலாறு நாடகத்தில் வரும் பாடல்களுக்கு இவரே இசையமைத்துப் பாடியும் தந்தவர் என்பதில் நாம் பெருமைப்படுகின்றோம். இதற்காக இந்நாடக மேடையேற்றத்தில் இவரை எமது கி.வா.சமூகம் கௌரவித்தது.

இதேபோன்று எனது மனைவி திருமதி.வசந்தி நேருவினால் நடாத்தப்படும் 'நிருத்திய கலாலயா' நடன வகுப்பின் நடாத்தப்படும் நடன நிகழ்வுகளுக்கு ஜீவம் அண்ணன்தான் கிளறினட், புல்லாங்குழல் ,வயலின் போன்ற இசைக்கருவிகளை வாசிப்பார். அதேபோன்று இவ்வகுப்பினால் மேடையேற்றப்படும் நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்துக் கொடுப்பவரும் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் பல தங்கப்பதக்கங்களையும் இக்கலாலய மாணவர்கள் பெற்றுள்ளனர். எனவே இம்மாணவர்களின் அரங்கேற்றங்களில் அண்ணன் அவர்களை பலமுறை நாம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளோம்.

அண்மையில் அவரது ஆசையை எமது மாணவர்கள் நிறைவேற்றினார்கள் எப்படியெனில் 'மீன்மகள் பாடுகிறாள்' பாடலில் வரும் கூத்து, மகிடி, கோலாட்டம், காவடி, கரகம் போன்ற காட்சிகளை ஒரே மேடையில் நடனமாகக் காட்டவேண்டும் என்பதே. இதைக் குறைந்தது 30 மாணவர்களைப் பயிற்றுவித்து இவரது இசையுடன் கடந்த 2012ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு அன்று 'ரூபவாகினியில்' நடனமாகக் காண்பித்தோம். இதைப் பார்த்து மிகவும் மகிழ்ந்த திருமதி.வசந்தியை தனது வாயாரப் பாராட்டினார். இவர் தனது இறப்பிற்கு முன் தனது பணியை அமிர்தகளி கப்பலேந்தி மாதா அன்னையிடமே ஒப்புக்கொடுத்தார். மாதாவின் பாடல்களைப் பாடி இறுவெட்டுக்களாக வெளியிட்டார். அத்துடன் தனது குடும்பமே இம்மாதாவின் தொண்டில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.கோயில் கட்டுமானப் பணி, வின்சன்டிப்போல் சபை, மரியாயின் சேனை பாடகர்குழு இப்படியான பணியிலும் பல பாதயாத்திரைகளிலும் தலயாத்திரைகளிலும் பங்கு கொண்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக இறைவனைத் தினமும் எனது செபத்தில் மன்றாடுகின்றேன்.

*திரு. நேரு மோசஸ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பம் சரிந்தது

திரு.இராஜசிங்கம்
பார்த்தீபன் (பவான்)

*சிற்பம் சரிந்தது
சிப்பிதனின் பிழையோ?
நல்லதோர் அமிர்தகனி
மண்ணில் கண்டெடுத்த உருவம்
நாடு கடந்த வேளை
உதிர்ந்தது என்னவோ?
வேளாங்கண்ணிசென்று
வீடு வந்த வேளை
வேதனை வந்ததையா உன் நெஞ்சில்
எப்போதும் அங்கிருக்க வேண்டும் என்று
அன்னை அவள் நினைத்தாளோ? – இங்கு
கப்பலேந்திமாதா ஊன் கானம்
கேட்காமல் கலங்குகிறாள் – நின்று
கவியூற்றாய் வாழ்ந்தாய்
கப்பலேந்தி அன்னை
இசைமகனாய் என்றும்
நாவில் நாதமாய்
நற்குணம் கொண்டவனாய்
வையகத்தில் வாழ்ந்தாய்
வஞ்சகமில்லா மனிதனாய்
சிரிப்பில் குழந்தையாய்
சிந்தனையில் சிற்பியாய்
மரித்தும் உன்புகழ் மறவா அமிர்தகனி......*

# எங்கும் நிறைந்தனை

நாதம் சொரிந்திட்ட நா
மௌனித்தது
கீதம் சொரிந்திட்ட கண்டம்
கிறங்கியது
துளைகளிலும் இழைகளிலும்
இசைபிழிந்த விரல்கள்
துயில் கொண்டன.
உன்முகத்தில் வடித்திருந்த
மோனா லிசா சிரிப்பு
விடைபெற்றது.
உன் பொன்னுடலம் சாய்ந்தது,
புகழுடலம் பொலிந்தன்றோ!
வாய்ப்பாட்டில் நீ வான்மழை
வாத்தியங்கட்கு நீதான்
வாத்தியர்
சிற்பம் உனக்கு
மகுடிப் பாம்பு.
இசை அமைப்புக்கு
நீதான் இதயம்.
மொத்தமாய் இவையெலாம்
முகிழ் இடம் என்பதால்
கலைசேர் நீ ஓர்
கலைக் களஞ்சியம்
மட்டுநகரப் பாலத்து வள்ளுவர்
எழுதாக் குறளாய்
என்றும் நீ இருப்பாய்.
மீன்மக்கள் கீதத்தின் மிகுகான
இசையில்
நீங்காச் சுரமாய்
நீ என்றும் மிளிர்வாய்.
வாய்க்கவில்லை இசை
என்னும் போதெல்லாம்
ஜீவன் இல்லையே
எனச் சொல்ல வைப்பாய்.
கிறங்க வைக்கும்
இசைகேட்கும் போதெலால்
இறங்கி வந்தனை
என மூச் செறிவோம்
மொத்தத்தில் நீ
இருந்தது ஓரிடம்
முழுமையாய் எங்கும்
நிறைந்தன மாதோ !!

**- அன்னதாசன் -**
கி.துரைராசசிங்கம்
மாகாண சபை உறுப்பினர்
கிழக்கு மாகாண சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை ஞானமும், ஆசிரியப்பண்பும் நிறைந்தவர் எங்கள் ஜீவம் சேர்

புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் உபஅதிபருமாகிய திரு.ஜீவம் ஜோசப் அவர்களின் வழிகாட்டலில் என் மாணவப் பருவத்தில் Brass Band வாத்திய அணியில் பயிற்சி பெற்று செயற்பட்ட அனுபவத்தினையும், பின்னர் புனித மிக்கேல் கல்லூரியிலே அவருடன் இணைந்து ஆசிரியப் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தின் அனுபவத்தினையும் கொண்டு திரு.ஜீவம் ஜோசப்' அவர்களின் திறமைகளையும், ஆசிரியத்துவ 'பண்புகளையும் மீட்டிப்பார்க்க விரும்புகிறேன்.'

இது ஒருவரின் புகழ்பாடும் வார்த்தைகள் அல்ல. மட்டுநகர் மண்ணுக்கும், புனித மிக்கேல் கல்லூரிக்கும் பெருமை சேர்த்த ஒரு கலைஞனின் குறுக்கு வெட்டுமுகம்.

நம் நாட்டில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த தமிழர் உலகில் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அறியப்படுகின்ற ஒரு இசை ஆளுமை தான் ஜீவம் சேர்

**"மீன் மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்**
**மட்டுநகர் அழகான மேடையம்மா – இங்கு**
**எட்டுத்திசையும் கலையின் வாடையம்மா**
**ஏலேலோ ஏலேலோ ஏலேலோ......**

என்ற கிழக்கின் மண்வாசம் வீசும் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் கவிதை வரிகளுக்கு உயிரூட்டி இசை இயக்கம் செய்து நம் உள்ளங்களில் இப்போதும் நினைத்தாலே இனிக்கும் ஜீவ கானமாக படைத்த ஆற்றல் மிகு இசைக்கலைஞனாகவும், வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித மிக்கேல் கல்லூரியின் கம்பீரமான அழகுத்தோற்றத்தை வடிவமைத்த தந்தை பேடினட் பொணல் என்ற சிற்பியையே சிலையாக வடித்து கல்லூரி முற்றத்தில் நிறுவிய சிற்பியாகவும் தன்னை அடையாளப்படுத்துகின்ற பன்முக ஆற்றல் கொண்ட ஒருவர்தான் ஜீவம் சேர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கு தடையின்றி இயற்கையாகவே கொண்டிருக்கும் இசை எனும் கொடையை வெளிப்படுத்தும் பேராற்றல் இவரிடம் உள்ளது என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உள்ளன.

இலங்கை அரசாங்க கல்வித்திட்டத்துக்கு அமைவாக பாடசாலை மாணவர்களுக்கு அழகியல் பாடத்தை கற்பிக்க பொருத்தமானவர்கள் நியமிக்கப்படுவது குறைவாகவே உள்ளது. காரணம் ஒரு சில அழகியற் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இயற்கையான கலை ஞானமும், ஆர்வமும் அமைந்திருப்பதில்லை. அதுபோலவே படைப்பாற்றல் கொண்ட கலைஞர்களுக்கு ஆசிரிய நியமனமும் கிடைத்துவிடுவதில்லை.

இருந்தாலும் தமிழ், சிங்கள சமூகங்களில் கலைஞானமும், ஆசிரியத்துவ பண்புகளும் நிறைந்த ஒரு சிலர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் திரு.ஜீவம் ஜோசப் அவர்கள் முக்கியமானவர். அண்மையில் முன்னாள் வடகிழக்கு மாகாண உதவி கல்விப்பணிப்பாளர் திரு.வேலானந்தன் அவர்கள் கிழக்குப்பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற்கற்கை நிறுவகத்தில் நிகழ்ந்த நடன அரங்கேற்ற மேடையில் திரு.ஜீவம் ஜோசப் அவர்களை இசைத்துறையின் ஜாம்பவான் என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

இவர் ஏறக்குறை 30 வருடங்கள் புனித மிக்கேல் கல்லூரியில் பணிக்காக அமர்த்தப்பட்டது ஒரு வரப்பிரசாதமே. தன்னை அன்று உருவாக்கிய கல்லூரியில் முழு விருப்புடன் இசைப்பணி புரிந்து கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுத்தவர்.

புனித மிக்கேல் கல்லூரியில் கற்கும் போதே வாத்தியக் கருவிகளை வாசிக்கும் திறன் இவரிடம் இருந்தது. ஆனால் அதோடு மட்டும் தன்னை சிறைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. தென் இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று சாஸ்திரிய சங்கீதத்தை முறையாக கற்றுத் தேர்ந்தது மட்டுமல்லாமல், மேற்கத்தேய இசை நுணுக்கங்களையும் அறிந்து கொண்டு நாடு திரும்பினார். இவரது பிரதான இசைக்கருவி வயலின் (Violin) (left Hand Violinist என்ற பெருமையும் இவரைச்சாரும்), வயலின் இசைப்பது போலவே Trumpet, Recorder, Flute, Clarinet, Trumbone, Sexaphone, Accordian, Keyboard, Guitar, நாதஸ்வரம், முகவீணை போன்ற இசைக்கருவிகளையும் மிகவும் சிறப்பாக இசைக்கும் திறன் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்நாடக இசையையும், மேற்கத்தேய இசையையும் கற்று புலமை பெற்றதனால் மேற்கத்தேய இசைக்கருவிகளை கொண்டு கர்நாடக இசைக்கச்சேரிகளை களைகட்ட வைத்து விடுவதில் வல்லவர். இவரிடம் சாதாரண ஆற்றல் கொண்ட எந்த ஒரு மாணவனையும் சாதனையாளராக உருமாற்றம் செய்துவிடும் சக்தியும், திறனும், மனப்பாங்கும் நிறைவாக இருப்பதை நான் வாழ்வில் அவதானித்து இருக்கிறேன். இவரிடம் கற்ற பல மாணவர்கள் இசை உலகில் இப்போதும் பிரகாசிப்பது இதற்கு நல்ல உதாரணம்.

ஜீவம் சேர் நமது கல்லூரியில் இசைப்பணி புரிந்த 30 வருடகாலமும் கல்லூரியின் இசை வரலாற்றில் பொற்காலம் என்றே கூறவேண்டும். ஏனெனில் இவரது காலத்தில் அகில இலங்கை தமிழ்மொழித்தினப்போட்டியில் அதிகளவான தேசிய விருதுகளை கல்லூரி வென்று இருக்கிறது. புத்தகப்பாடல் என்றால் புனித மிக்கேல் கல்லூரிதான் முதலிடம் என்ற முத்திரை பதிக்கப்பட்டு இருந்த காலம் அது. முற்றிலும் வெண்கல இசைக்கருவிகளைக் (Brass Band) கொண்ட Band அணியை அதிக மாணவர்களை இணைத்து தரம் குறையாமல் இயக்கி வந்தார்.

முதன்முதலில் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச நாடுகள் மாநாடு, இலங்கை குடியரசு பெற்ற நிகழ்வு. எக்ஸ்போ (Expo 92) கண்காட்சி ஆகிய நிகழ்ச்சிக்கு அரசாங்கமே எமது கல்லூரி Band அணியை கொழும்புக்கு அழைத்து இருந்தது. இதற்குக்காரணம் கல்லூரி Band இன் சிறந்த இசையும், அணிநடையும் தான்.

இலங்கையில் முதன் முதலில் முற்றிலும் தமிழ்க் கலாசாரத்திற்குரிய சாஸ்திரிய இசையைக்கொண்ட இன்னியம் ஒன்றை கல்லூரியில் உருவாக்கி பெருமை சேர்த்தார். இதனால் இன்னியத்தின் முன்னோடி ஜீவம் சேர் என்றே குறிப்பிட வேண்டும். 15 மாணவர்களைக் கொண்ட இன்னிய அணி 1999ம் ஆண்டு கொழும்பு மாநகரில் இசைமுழக்கம் செய்தது என்றால் இன்றும் மறக்க முடியாத நிகழ்வாக உள்ளது.

இவற்றை எல்லாம் சிறப்பாக செய்வதற்கு இவரது இசை ஆற்றல் அடித்தளமாக இருந்தாலும், இவரிடம் இருந்த ஆசிரியத்துவப் பண்புகளும் பெரும் பங்காற்றி இருக்கின்றன எனறே கூறவேண்டும். சில ஆசிரியர்கள் தொழிலுக்காக பாடசாலைகளுக்கு வந்து கற்பித்துச் செல்கின்றனர், பல ஆசிரியர்கள் மாணவர்களுடைய வாழ்க்கையில் கரிசனை கொண்டு பாடசாலைகளில் தங்களை வளவாளர்களாக அர்ப்பணித்து வாழ்கின்றனர். இதில் ஜீவம் சேர் இரண்டாவது வகையைச் சார்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நேரத்தை தவிர்ந்த ஓய்வு நேரங்களை அதிகம் பாடசாலைக்காகவே தியாகம் செய்தவர். ஓய்வு நேரத்தை எவ்வாறு பயனுள்ளதாக்கலாம் என்பதை ஜீவம் சேரிடம் தான் கற்க வேண்டும். அவர் ஓய்வு நேரங்களை கல்லூரி தேனீர்ச்சாலையில் கழித்ததை நான் காணவே இல்லை. பழுதடைந்த வாத்திய இசைக்கருவிகளை திருத்தும் திறனும் இருந்ததால் ஓய்வு நேரங்களை அதிலும் செலவிட்டார். அவரது வீட்டைக் கடந்து சைக்கிளில் எனது வீட்டுக்குச் செல்லும் போது முற்றத்தில் காட்சிதரும் பூமரங்களும் அழகிய சின்னச் சின்ன சிலைகளும் எப்போதும் காதிலே விழும் ஏதோ ஒரு இசைக்கருவியின் சப்தமும் ஓய்வு நேரத்தை எப்படி பயனுள்ளதாக்குகிறார் என்பதை தினமும் புரிய வைக்கும்.

பாடசாலை நிகழ்ச்சிகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே வந்து முழுமையாக பங்கெடுத்து இறுதியில் சகலரும் சென்றபின் வீடு செல்லும் பழக்கம் இவரிடம் இருந்தது.

இவர் கற்பித்த பாடம் கூடிய அளவு திறன் விருத்தியுடன் தொடர்புடையது என்பதால் ஒவ்வொரு மாணவரதும் தனித்தன்மையையும் அறிந்திருந்தார். அது அவர்களை வழிநடத்த இவருக்கு உதவியாய் அமைந்தது. இதன் காரணமாக மாணவர்களுடனான உறவு ஆரோக்கியமானதாக கட்டி எழுப்பப்பட்டிருந்தது. பெற்றோரதும் கல்வி அதிகாரிகளினதும் நம்பிக்கையை வென்ற ஒரு ஆசிரியராக இருந்தார்.

அமைதியான நடையுடை, பாவனை என்றாலும் தனது கருத்தில் உறுதியாக இருப்பார். ஆன்மீகம் இவரது வாழ்வில் மற்றுமொருபக்கம். கல்லூரியின் சகல சமய நிகழ்வுகளிலும் இவரது பாடல்கள் அழகுசேர்க்கும். இவரது பாடல்கள் கேட்பதற்காகவே ஒரு கூட்டமும் சேரும். தான் நுகர்ந்த கல்லூரியின் பாரம்பரிய கலாசாரங்களை அடுத்தடுத்து வந்த தலைமுறையினருக்கு பரிமாற்றம் செய்வதில் காலங்களை செலவிட்டார்.

நமது கல்லூரி எதிலும் இரண்டாவது இல்லை என்பது சிலருக்கு வார்த்தை மட்டுமே. ஜீவம் சேருக்கு இதுவே வாழ்க்கை. கல்லூரியினதும் அதை வழிநடத்திய துறவிகளின், ஆசிரியர்களின் பெருமையையும் அனுபவங்களையும் அடிக்கடி எம்மோடு பகிர்ந்து கொள்வார்.

உண்மையில் ஜீவம் சேர் எமது மண்ணிற்கு கிடைத்த ஒரு கொடை. அவரிடம் நிறைந்துள்ள இசைத்துறை, ஆசிரியத்துவம் சார்ந்த அனுபவங்கள் நமக்கும் நம் மாணவர்களுக்கும் முழுமையாக கிடைக்கும்போது மேலும் நம்மால் நல்ல மாற்றத்தை உருவாக்க முடியும்.

- அ.ஜெகன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இசையின் ஜீவன்!

ஜீவம் சேர்
நான் உச்சரிக்கும் மந்திரம்
என் ஆத்மாவின் இராகம்
இசை வானில் பறந்திட
இறக்கைகள் தந்த இசைஞானி
அவருக்குள் நான்
எனக்குள் அவர் என்றாகிவிட்ட
என் மானசீகக் குரு!
புனித மிக்கேல் கல்லூரி
எனக்கு அவரைக் காட்டிற்று
அவரோடு இணைத்திட அது உதவிற்று!
சங்கீதம் என்னவென்று தெரியாது
இசை - அதிலே நான் பூச்சியம்
வெற்றுப் பாத்திரத்தோடு
அவரது சந்நிதானத்தில் சரண்புகுந்தேன்!
'சஞ்ஜயன் பாட்டொன்று பாடும் ஐசே' என்றார்
பாடினேன்!
மனம் திறந்தார்
'நல்ல குரல் வளம் ஐசே' என்று
வாய் திறந்தார்!

வாய்ப்புக் கிடைத்தது
சுரவரிசை சொன்னார்
சங்கீதம் எனக்குள் சுரந்தது!
இராகங்கள் பாடினார்
எனக்குள் இசை உருக்கொண்டது!
அவரது கை விரலில் பிறந்த நாதம்
என் விரல்களை அசைய வைத்தது!
அவர் குரலில் பிறந்த கீதம்
என் குரல் நாண்களை அதிரவைத்தது!
சங்கீதம் இனித்தது!இசை தேனானது!
க.பொ.த(சா/த) பரீட்சை
கோட்டையும் வாய்ப்பாட்டையும் சேர்த்து
அதியுயர் சித்தி தந்தது!
பாண்ட் இசைக்குழுவோடு என்னை
இணைத்தார்
வாத்தியக் கருவி 'றம்'
என்கரம் தந்தார்!'றம்' அதிர்ந்தது.
குழுவிலே என் பங்கு தொடர்ந்தது!
இன்னியம்-தமிழர் பண்பாட்டுக் கலை
வடிவம்
கல்லூரியில் தொடக்கி வைத்தார்
'தவில்' எனக்கு தந்தார்
தவிலோசை முழங்கிற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைகள் பலவற்றில் எங்கள்
கச்சேரி அரங்கேறிற்று
என் ஆசான் புகழ் ஓங்கிற்று!
தமிழ்த்தின இசைப் போட்டிகளில்
தங்கம் நான் வெல்லத்
தரமான பயிற்சி தந்தார்!
இன்னும் பல போட்டிகளிலும்
தங்கம் வென்றேன்!
இசை வானில் பறந்திட எனக்கு
இறக்கைகள் பரிசளித்தார்!
கலைஞனுக்கு ஒழுக்கம் அவசியம்
ஒழுக்கமாய் ஒழுகிட வைத்தார்
இன்று எனக்கது பெருமையாயுள்ளது!
என் ஆசானே!
நலமுடன் வாழ்கிறீர்கள் என்ற
நல்ல சேதிகேட்டு மகிழ்ந்தேன்
பொறுக்காத காலனோ
என் மகிழ்ச்சியில் மண்ணைப் போட்டான்!
நள்ளிரவில் நான்கேட்ட செய்தி என்
நாடி நரம்புகளை இறுக வைத்தது!
நினைவலைகள் முட்டி மோதுகின்றன!
நம்முறவுகளால் பதிந்துபோன காட்சிகள்
என் விழித்திரையில் ஒவ்வொன்றாய் விரிகின்றன
என் குரு நாதரே!

உன் அருகில் நின்று அஞ்சலிக்க முடியவில்லை!
அழுகின்றேன்!
துயரம் என் நெஞ்சைப் பிழிகின்றது!
தேனாடு பெரிது வந்த
தேடற்கரிய பெருங்கலைஞன் நீ!
தேனாட்டின் தேனிசைத் தென்றல் நீ!
பொனல் அடிகளாரை
உலக மகா ஞானி வள்ளுவனை
சிலை வடிவமாக்கிய ஒப்பற்ற சிற்ப கலைஞனே
எங்கள் மனங்களில் சிலையாய் நிலைப்பெற்றாய்
எங்கு நான் வாழ்ந்தாலும்
என் கண்ணுக்குள் மணியானாய்!
வாழ்க நீ! ஓங்குக உன் புகழ்!

- நன்றி -

*தவராஜா சஞ்ஜயன்*
*ஸ்காபரோ,*
*ரொறன்றோ,*
*கனடா.*
**2013.08.01**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவம் ஜோசேப் சேருடன் என் அனுபவத்துளி

1972ம் ஆண்டு மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் நான் ஒரு மாணவன். அமரர்.ஜீவம் ஜோசப் ஆசிரியர் எமது கல்லூரிக்கு அடிக்கடி வந்து போவார். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைமாணிப் பட்டம் பெற்றும் அரச ஆசிரியர் நியமனம் கிடைக்கப் பெறாத நிலையில் புனித மிக்கேல் கல்லூரியிலும் புனித சிசிலியா பெண்கள் பாடசாலையிலும் தற்காலிகமாக இசை ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

இவ்வேளையில்தான் எங்களோடு படித்த திரு.சேகர் ஜோசப் என்ற மாணவனை அவர் இனங்கண்டு கேள்கிறார். சிறந்த குரல் வளம் மிக்க அந்த மாணவனை ஒரு பாடகனாக மேடையேற்றி மட்டக்களப்பு மக்கள் முன் அறிமுகமாக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் உருக்கொள்கிறது.

மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் அதேயாண்டு அமரர். ஜீவம் யோசப் சகோதரர்கள் இசையால் ஒன்றிணைகிறார்கள். **'ஜீவகானம்'** என்னும் இசை நிகழ்வு மிகப் பிரம்மாண்டமான முறையில் இடம்பெறுகிறது. மண்டபம் நிரம்பி கதவுகள் ,ஜன்னல்கள் வழியாகவும் இசை ரசிகர்கள் கூட்டம் அலைமோதுகின்றது. எங்களது நண்பான சேகர் ஜோசப் இந்நிகழ்வில் பாடுகிறான் என்பதனால் நாமும் நிகழ்வில் ஆர்வத்தோடு பங்கெடுத்துக் கொள்கின்றோம். இசை ரசிகர்களின் பெருத்த கரகோஷம் ,ஆர்ப்பரிப்புக்களின் மத்தியில் மூன்று மணிநேர நிகழ்வு நிறைவுக்கு வருகிறது. எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு மேடையில் ஏறி அந்த ஜீவகானத்தை வழங்கிய 'ஜீவம் சகோதரர்களை' நெஞ்சு நிறைந்த நன்றிப்பெருக்கோடு வாழ்த்துகிறார்கள்.

நானும் என் பங்குக்கு மேடை ஏறுகிறேன். பாடகனாக அந்தஸ்துப் பெற்றுவிட்ட சேகர் ஜோசப் மற்றும் எங்கள் கல்லூரியின் இன்னுமொரு மாணவனாக இசை நிகழ்வில் 'ரம்பெர்ட்' வாத்தியம் இசைத்த டெரன்ஸ் சிறில் ஆகியோரையும் வாழ்த்திவிட்டு ஜீவம் சேர் ,குணம் சேர் ,ஞானம் சேர் ,யோகம் சேர் ,Dr.ஞானப்பிரகாசம் சேர் எல்லோரையும் தொட்டு வணங்காத குறையாக பாராட்டிவிட்டுத் திரும்புகிறோம்.

இன்று 42 வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. உணர்ச்சிக்கவிஞரால் வரி எழுதப்பட்டு அமரர் ஜீவம் ஜோசப் அவர்களால் இசையமைப்புச் செய்யப்பட்ட ஜீவகானம் நிகழ்வில் நான் கேட்ட அந்த மட்டக்களப்பு மண்ணின் தேசிய கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மீன் மகள் பாடுகிறாள். வாவி மகள் ஆடுகிறாள்' இன்னும் அப்படியே என் நெஞ்சுக்கள் வைத்து அந்த மாபெரும் கலைஞனைப் பூஜிக்க வைக்கிறது.

2013 மே 24ம் திகதி மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் சேகர் ஜோசப் நடாத்திய ஒரு இசைநிகழ்வு அதில் ஜீவம் ஜோசப் சேர் அதிதிகளில் ஒருவர். அவரைக் கௌரவிக்க எல்லோரும் மேடையின் முன்னே எழுந்து நிற்கின்றோம். சேகர் யோசப்பின் சித்தப்பாவான திரு.பிரான்சிஸ் அவர்கள் பொன்னாடை போர்த்த அவரது **'மீன் மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்'** பாடல் மேடையில் இசைக்கப்படுகிறது. அவருக்கு கௌரவம் அளிக்கும் வகையில் அவரது மாணவர்களான சேகர் ஜோசப், நிலாம்சன் குருஸ் ,மனோஜ் வல்லிபுரம் ஆகியோரும் இன்னும் சிலரும் பாடுகிறார்கள். பின்னணியில் தபேலா வாத்தியத்தினை அவரது மாணவனான குகன் நல்லலிங்கமும், கீபோட் வாத்தியத்தை அவரது மாணவனான யூட் திலீபன் பிரான்சிஸ்சும் இசைக்கின்றார்கள். நெஞ்சு நெகிழ்ந்து ஜீவம் சேர் பேசுகிறார். 'எனது மாணவன் என்னால் அறிமுகப்படுத்தப்பட்ட சேகர் ஜோசப் என்னைப் பல தடவை கௌரவித்துவட்டான். இன்று நான் அவனை இந்த மேடையில் கௌரவிக்கிறேன்' என்று தன் கையால் அவனுக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்கிறார். நிகழ்வு நிறைவு பெறுகிறது. நான் அவர் காலடிக்குச் செல்லுகின்றேன். இசை நிகழ்வில் பங்கெடுத்த கலைஞர்கள் எல்லோரும் அவரிடம் **'நான் உங்கள் மாணவன் சேர'** என ஒப்புதல் வாக்கு மூலம் அளிக்கிறார்கள். நெகிழ்ந்து போகின்றார். எதுவும் பேசாமல் வாய் அடைத்து நின்ற அவரிடம் நான் மட்டும் ஒரு வினாத் தொடுக்கிறேன். அது..........'42 வருடங்களுக்கு முன் உங்கள் சகோதரர்களை இணைத்து **'ஜீவகானம்'** தந்தீர்கள். இப்போது உங்கள் மாணவர்களின் பலர் இசைக் கலைஞர்களாக வளர்ந்து விட்டார்கள். அவர்களை இணைத்து ஒரு **'ஜீவகானம்'** தாருங்கள். என்றேன். வாய் பேசாது நின்ற அவர் தலையசைத்தார். அந்த தலையசைப்பு குணம் ஜோசேப் தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டது போல் தேவலோகத்தில் அவர் வழங்கவிருக்கம் **'தேவகானம்'** இசைப்பேன் என்பதற்கான கட்டியம் கூறலானதா............................ விழி கலங்கி நிற்கின்றோம்.

***திரு. ஆ. கி. பிரான்சிஸ்.***
***– ஆசிரியர் –***
***முன்னாள் தலைவர் கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியம்,***
***மட்டக்களப்பு மறைக்கோட்டம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளில் அப்பா....

எனக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்து வீட்டில் எப்போதும் ஏதோ ஒரு இசை ஒலித்துக் கொண்டே இருக்கும். அது வயலினாகவோ ,புல்லாங்குழலாகவோ ,கிளாரினற்றாகவோ ,சக்சபோனாகவோ ,கிற்றார் ,மெண்டலின் ,ஓர்கன் இப்படியானவற்றை சொல்லலாம். நான் சிறுவனாக இருந்ததனால் அப்பாவின் மேடை நிகழ்ச்சிகளை நேரில் பார்த்த ஞாபகம் எனக்கில்லை. ஆனால் ஒத்திகைகள் நடைபெறும் வேளைகளில் வீட்டில் பார்த்திருக்கின்றேன். வெறுமனே தபேலா ஆர்மோனியம் போன்ற இசைக்கருவிகளை வைத்து இசைநிகழ்ச்சிகளை செய்து வந்த காலங்களுக்குப் பின் முதன் முதலாக (எலென்றிக் ஓர்கன் ,எலெட்றக் கிட்டார்) போன்ற இசைக்கருவிகளை அறிமுகப்படுத்தியவரும் இவர்கள்தான். எங்கள் வீட்டில் வண மேயர் அடிகளார் கொடுத்த ஓர்கனை வைத்தே அந்நாட்களில் இசைநிகழ்ச்சிகளை செய்து வந்தார். இந்த ஓர்கனை இலங்கையின் ஏனைய இடங்களில் நடைபெறும் இசைநிகழ்ச்சிகளுக்கு சிலர் எடுத்துச் செல்வர்.

எனக்கு முதன்முதலில் இசையில் ஆர்வம் வந்து நான் விரும்பி இசைத்த இசைக்கருவி 'டிறம்ஸ்' தான். எங்கள் வீட்டில் 'டாமா எக்கோஸ்ரிக் டிறம்ஸ்' இருந்தது. அதனை அப்பா வாசிக்கும் போது பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் இடக்கைப்பழக்கமுடையவராததால் சில பாகங்களை மாற்றி வைத்து வாசிக்கும் முறை எனக்க மிகவும் பிடித்திருந்தது. அவர் வாசிப்பதை பார்த்து நானும் வாசிக்க ஆரம்பித்தேன். அவர் எனக்கு சொல்லித்தந்த முதல் தாளம் இப்போதும் என் நினைவில். பின்னர் ஓய்வு நேரங்களில் அப்பா ஏதோ ஓர் இசைக்கருவியை இசைக்க நான் டிறம்ஸ் வாசிப்போன். நான் 6ம் வகுப்பில் இருக்கும் போது அப்பாவின் கிஸ்தவ மேடை நிகழ்சிகளுக்கு டிறம்ஸ் வாசித்திருக்கிறேன்.

வீட்டில் பாடல்களைச் சொல்லித் தருவார். முதன் முதலில் அமிர்தகளி புனித கப்பலேந்தி அன்னை ஆலயத்தில் 1985ம் ஆண்டு மறைக்கல்வி மாணவர்களின் ஒளிவிழா நிகழ்ச்சிக்காக **'சின்னக் குழந்தை யேசுவுக்கு வண்ணத் தொட்டில் ஒன்றமைத்து'** என்ற பாடல் மூலம் என்னை மேடையேற்றினார். பின்னர் பல மேடைகளிலும் பாட ஆரம்பித்தேன். புனித மிக்கேல் கல்லூரியின் சார்பில் தமிழ்தினப் போட்டிகள் அனைத்திற்கும் சென்று முதல் பரிசு பெற என்னை ஊக்குவித்தார். இது என்னை அகில இலங்கைத் தமிழ்தினப் போட்டி இறுதி வரை கொண்டு சென்று வெற்றி பெற வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவிடம் அனேகர் பாடல் எழுதவும் அவற்றிற்கு மெட்டுப் போட்டுத்தரச் சொல்லியும் கேட்டு வருவார்கள். தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் என 500ற்கு மேற்பட்ட பாடல்களை எழுதியிருக்கிறார். அவற்றில் மெல்லிசைப்பாட்டுகளும், கொள்கை கீதங்களும், ஆலயவழிபாட்டுப் பாடல்களும், கிறிஸ்தவ கீதங்களும், நாடகப்பாடல்களும் போட்டிகளுக்காக என கூறிக்கொண்டே போகலாம்.

எனக்குத் தெரிந்த பாடல்களில்

**ஆரம்பகாலத்தில் ஜீவகானங்களுக்காக எழுதி மெட்டமைத்த பாடல்கள்.**

(1) வெண்ணிலவின் ஒளியினிலே.........
(2) மீன்பாடும் வாவியிலே...................
(3) வெள்ளி நிலவினிலே ஓடம் விடுவோம்.............
(4) துள்ளித்துள்ளி ஓடுகின்ற பள்ளி மாணவன்.......
(5) எந்நாளும் உனக்காகப் பாடுகிறேன்.................
(6) அக்காச்சி அக்காச்சி அருமை அக்காச்சி..................
(7) ஸரிகமபாபா (மினி மினி ஸோமெனி)......
(8) சின்ன மாமா சின்ன மாமா...........................
(9) கோட்டைமுனைப் பாலத்திலே........................
(10) ஆலையடிச் சோலையடா................................
(11) வாத்தியாரையா வாத்தியாரையா........................... போன்ற பாடல்களும்

**கிறீஸ்தவ கீதங்களாக எழுதி இசையமைத்த பாடல்களாக**

(1) இறைவா என் இதயத்தில் எழும் ராகங்கள்........
(2) ஆனந்த இராகங்கள்........................
(3) சங்கீத வீணையில் இசையெழுப்பி......................
(4) சங்கீதம் முழங்கிப்பாடிடுவேன்.................................
(5) பணிவுடன் தருகின்றேன் என்னையே.........................
(6) அணைக்கும் கரங்களே................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(7) சிலுவைமரம்........................................

(8) கல்வாரிக்காட்சி.................................

(9) அன்பான யேசு தேவனே...........................

(10) நெஞ்சமே நீ உன்னைக்கேள்................................

(11) வானின்று கானமழை............................

(12) அன்பே உருவம்................................

(13) பிறந்தார் இறைமகன்...............................

(14) தேடி வந்த செல்வமே............................

(15) மண்மீது தேவன் மனிதனான.........................

(16) மீண்டும் நீ வர வேண்டும்...............................

(17) சின்னக் குழந்தை யேசுவுக்கு......................

(18) பாலனே என் தேவனே..............................

(19) நெஞ்சம் எங்கும் பொங்கியெழும்..............................

(20) தாயின் மடியில் பூவைப் போல...................................

(21) திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட நூற்றாண்டு கீதம்.

(22) கிறீஸ்து பிறப்பின் 2000 ஆண்டு யூபிலிப் பாடல்

(23) அருட்திரு ஆஞ்சலோ பொன்னையா அவர்களில் குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கிற்காக ‘பெயர் சொல்லி என்னைப் பெருமான் அழைத்தார்‘ என்றப் பாடலையும்.

(24) அருட் தந்தை போல் சற்குணநாயகம் (யே.ச) அவர்களின் அர்ப்பணவாழ்வில் பொன்விழாத் திருப்பலிக்காக ‘இறைமக்களே வருவீர்‘ ‘அன்னையின் கருவினில் என்னை‘ போன்றப் பாடல்களையும்

(25) திருமணச்சடங்கிற்காக ‘திருமணத்திருப் பலி ஆரம்பமாகின்றது‘ ‘திருமண நாளிதுவே அனைவரும் மகிழ்ந்திடுவோம்‘

(26) ஆண்டவன் ஆலயத்தில் கூடிடுவோம்.......................

(27) அன்பியம் அன்பியம் அன்பியம்..............................

போன்ற பல பாடல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலேந்தி அன்னையின் பெயரில்

(1) வாங்கள் கப்பலேந்தி மாதாவிடம்...........................

(2) அன்னை மரியே அமலோற்பவமே.........................

(3) அன்னை மரி ஊர்கோலம் வருகிறாள்...................

(4) கப்பலேந்தி மாதாவே கருணையின் வடிவே..........................

(5) கப்பலை ஏந்தி நிற்கும் அற்புத மாமரியே..............................

(6) செம்மலர் கரம் தனிலே கப்பலை ஏந்தி நிற்கும்........................

(7) நீலக்கடல் தாலாட்ட...........................................

(8) அம்மா அம்மா அமிர்தநதித்தாயே...........................

(9) அமிர்தநதி வாழும் அம்மா அம்மா.........................

(10) கப்பலை ஏந்திடும் மாமரியே.......................................

போன்ற பல பாடல்களையும்

1980 களில் மட்டக்களப்பில் தயாரித்த 'அந்த இரவு சொன்ன உறவு' படத்திற்காக

(1) நிலவுக்கு இன்று பிறந்தாள்..........................................................................

(2) நீலவான மேடையில் நீலாம்பரி..........................................................................

(3) இறைவன் ஒரு புலவன்..........................................................................

இந்த ' இறைவன் ஒரு புலவன் ' என்ற பாடல் எனக்குப் பிரியமான பாடல் அழகிய வரிகள் அருமையான இசையும் கூட இந்தப் பாடலிருந்து சில வரிகள்.

இறைவன் ஒரு புலவன் - அவன்
எழுதும் பாடலே விதியாகும் - அதில்
ஜனனம் என்பது - பல்லவி
வாழ்க்கை என்பது - அனுபல்லவி
மரணம் என்பது - சரணம் (இறைவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I

மனிதனின் தலையில் எழுதியபின் - அவன்
மறுமுறை திரும்பிப் பார்ப்பதில்லை
மன்றாடி அழுது புரண்டாலும்
மாற்றி அமைத்துக் கொடுப்பதில்லை
ஏனெனில் அவனுக்கு நேரமில்லை. (இறைவன்)

**கொள்கை கீதங்களாக**

(1) வளம் வளர்ச்சி பணி எங்கள்..........................................................................

(2) கடமை கண்ணியம் கட்டுப்பாடு...................................................................

**ஏனைய பாடல்களாக**

(1) மட்டக்களப்பு மாநகரசபைக் கீதம்

(2) கமநல கீதம்

(3) வங்கிகளுக்கான பாடல்கள்

(4) புனித மிக்கேல் ,சிசிலியா பெ.பாடசாலை ஆகிய பாடசாலைகளின் பாடசாலைக்கீதங்களை தமிழில் பெயர்த்தமை.

**1960 காலப்பகுதியில் மேடை நாடகங்களுக்கான அனேக பாடல்களில்**

(1) இதயம் ஓய்வதில்லை

அனேக கிறீஸ்தவ வானொலி நிகழ்ச்சிகள்
2004 - கப்பலேந்திகானங்கள் பாகம் - 01
2012 - கப்பலேந்திகானங்கள் பாகம் - 02

நான் வளர்ந்த பின் அவர் இயற்றும் பாடல்களுக்கும் ,மெட்டுப்போடும் பாடல்களுக்கும் என்னைத்தான் இசை இயக்கம் செய்யச் சொல்வார். அனேகமான ஒலிப்பதிவுகளுக்கு நான்தான் இசை இயக்கம் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2008ல் மறக்க முடியுமா? இசை நிகழ்ச்சியில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008ம் ஆண்டின் பின் இருவரும் இணைந்து அவருக்கு வரும் பாடல்களையும் ,இசையையும் வீட்டிலேயே செய்யத் தொடங்கினோம். அந்த வகையில் 'யேசு சபையைத் தோற்றுவித்தவரான இன்னாசியாரைப்பற்றிய நாடகம் ஒன்றிக்கான பாடல்களை வீட்டிலேயே ஒலிப்பதிவு செய்து வழங்கினோம். பின்னர் மாநகரசபைக் கீதம் ,கமநல கீதம் பாலர் பாடசாலை கீதங்கள் என்று சொல்லி கொண்டே போகலாம்.

எனது தொழில் காரணமாக பாடல்களை எழுதியும் ,இசை அமைத்தும் ,இசை இயக்கம் செய்வதையும் ,பாடுவதையும் அனேகமாக வீட்டிலேயே செய்வதனால் நான் இசையமைத்து ,இசை இயக்கம் பண்ணும் போது இரவு 1,2 மணியென்றாலும் அவருக்கு நித்திரை வராதவிடத்து கலையகத்தில் வந்து கேட்டுக் கொண்டும் ,பார்த்துக் கொண்டும் இருப்பார். நான் இசை இயக்கம் செய்வதை ரசித்துக் கொண்டிருப்பார். நானும் செய்ததை முதலில் அவருக்குப் போட்டுக்காட்டி சந்தோஷப்படுவேன். நன்றாக இருந்தது என்பார். சென்ற வருடம் (2012)ல் கப்பலேந்தி அன்னைக்காக 'கப்பலேந்தி கானங்கள் பாகம் - 02' என்ற இறுவெட்டை வெளியிட்டேன். அதற்கு கப்பலேந்தி அன்னையைப் பற்றி மூன்று பாடல்களையும், எனக்காக இரண்டு பாடல்களையும் எழுதி மெட்டமைத்தார். இவ்வருட ஆரம்பத்தில் அன்னையில் மூன்று பாடல்களையும் படகாட்சிகளாக்கி இணையத்தளத்தில் வெளியிட்டிருந்தோம்.

இறுதிக்காலப் பகுதியில் அவர் எழுதி மெட்டமைத்த 'கல்வாரி மாமலையே' என்ற கிறீஸ்தவப்பாடலை மீளாக்கம் செய்து எனது இசை இயக்கத்தில் ஒலிப்பதிவு செய்திருந்தோம். சந்தோஷமாகச் செய்தோம். ஆனால் இந்தப்பாடல் தான் நானும் அப்பாவும் இணைந்து பணியாற்றிய இறுதிப்பாடலாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இந்தப் பாடலுக்காக வயலின் ,புல்லாங்குழல் ,கிளாரினெட் என்பவற்றை அவரை வைத்து வாசித்து ஒலிப்பதிவு செய்ய இருந்தேன். இந்நிலையில் பழங்காலத்துப் பெற்றோர் இப்போதையப் பெற்றோர்களுக்கு பிள்ளைகளை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று அறிவுரை கூறும் பாடல் ஒன்றை மேடை நடன நிகழ்வு ஒன்றிக்காக துள்ளிசை மெட்டில் நான் எழுதி இசையமைத்து பாடி ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்த காரணத்தால் அவருடைய பாடலை முடிப்பதற்கு நேரம் கிடைக்கவில்லை. இருந்தாலும் எனது பாடலை அவர் நன்றாக ரசித்து கேட்டுக் கொண்டிருப்பார். இதுவே நான் எழுதி இசையமைத்துப்பாடி அவர் கேட்ட இறுதிப் பாடலாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா எழுதிப் பாடிய இறுதிப் பாடலில் இருந்து சில வரிகள்



கல்வாரி மாமலையே - உன்னைக்
காலம் மறப்பதுண்டோ
சொல்லாலும் வடித்திட முடியாத ஓர் சோகக்
காவியம் படைத்து விட்டாய் - அதைக்
கல் மீது எழுதி வைத்தாய் - எம்மைக்
கண்ணீரில் மூழ்க விட்டாய்..........

அப்பா
சரித்திரம் உங்களை மறந்தாலும்
இந்த தமிழகம் உங்களை மறந்தாலும்
திரை நெரித்திடும் கடல் உங்களை மறந்தாலும்
எங்கள் நெஞ்சம் உங்களை மறக்கவே மறக்காது

அப்பா உங்களுடைய 'ஜீவகானங்கள்' எமிலின் 'பிரியநாதமாய்' எமிணியாவில் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

*அன்பு மகன்.*
*எமில் பிரியானந்த்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியுமா?

நான் புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி பயின்ற காலமாகிய 1966ம் ஆண்டில் என்னை திரு.குணம் ஜோசப் அவர்கள் நான் பாடக்கூடிய திறமை வாய்ந்தவர் என்பதைக் கண்டறிந்து எனது குருவாகிய ஜீவம் ஜோசப்பிற்கு அறிமுகப்படுத்தினார். அன்றிலிருந்து வில்லுப்பாட்டு, திருப்பலி, இசை, நாடகம் போன்ற கல்லூரி நிகழ்விலே எனக்கு முதன்மை இடம் கொடுத்து செயல்படுத்தினார். எனது குரு பாடசாலை மட்டங்களுக்கிடையிலான தமிழ்த்தினப்போட்டிகளில் என்னைக் கல்லூரியால் தெரிவு செய்து கிழக்கு மாகாணத்தில் முதலாம் இடம்பெறப் பயிற்றுவித்து, சாதனை படைத்தார். எனது மகனையும் பாடசாலை மட்டங்களிலே நடாத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டியில் குழுப்பாடலிலே உட்புகுத்தி அகில இலங்கை ரீதியில் 1ம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தையும் பெறவைத்தார். 1972ம் ஆண்டு நான் 13வயதுச் சிறுவனாக இருந்த சமயம் அருட்தந்தை.வெபர் அடிகளார் சமர்ப்பித்த ஆங்கில நாடகமான Amal and The Night Victors (கிறிஸ்து பிறப்பு சம்பந்தமான) தமிழாக்கம் செய்து இசை நாடகமாக உருவாக்கி என்னை ஒரு நொண்டிச் சிறுவனாகவும், திருமதி.வனஜா சிறினிவாசன் அவர்களை தாயாகவும் நடிக்க வைத்து மட்/மாநகர சபை மண்டபத்திலே மேடையேற்றி புகழாரம் பெற்றார். அத்துடன் ஜீவம் சகோதரர்கள் இணைந்து ஒரு இசைக்குழுவை உருவாக்க கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, இலங்கை பூராகவும் இசை நிகழ்ச்சிகளை நடாத்தி பலரின் பாராட்டை பெற்றவர். திரு.ஜீவம் ஜோசப் அவர்கள். நேரடியாக பல வாத்தியக் கருவிகளை (Live Instruments) இயக்கி மேடைகளிலே அமோக வரவேற்பைப் பெற்றவர் எனது குரு. பொப் இசைப் பாடல்கள் பிரபல்யமான காலங்களிலே என்னை

**(1) சின்ன மாமா சீனி மாமா**
**(2) கோட்டமுனை பாலத்திலே கச்சான் காத்தடி**
**(3) வாத்தியாரய்யா, வாத்தியாரய்யா**

என்ற பாடல்களை தானே எழுதி, இசையமைத்து என்னைப்பாட வைத்து பலரின் பாராட்டையும் எனக்கு பெற்றுத்தந்தவர் இவர். நான் மண்டபங்களிலே இசை நிகழ்ச்சிகளை நடாத்துகின்றபோது அவரை கௌரவ விருந்தினராக அழைப்பதற்கு மறப்பதில்லை. அவரது உரையிலே என்னைப் பற்றி கூறும் போது, யார் மறந்தாலும் எனது மாணவன் சேகர் ஜோசப் அவர்கள் மட்டும் என்னை மறப்பதில்லை என்று பெருமை கொள்வார்.

கடந்த 14.09.2008ம் திகதி மட்/தேவநாயகம் மண்டபத்திலே மட்டுநகரின் இசைத்துறை முன்னோடிகளான திரு.ஜீவம் ஜோசப், குணம் ஜோசப், ஞானம் ஜோசப், யோகம் ஜோசப் ஆகியோரை அழைத்து மறக்கமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இசை நிகழ்ச்சியை நடாத்தி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து 25 வருடங்களுக்குப் பின் ஒரே மேடையில் அவர்கள் அனைவரையும் பாடவைத்து வாத்தியக் கருவியையும் வாசிக்க வைத்த போது, எனது குரு தனது உரையில் கீழ்க்கண்டவாறு உரையாற்றினார்.

தற்போதைய தலைமுறையினருக்கு எம்மை யார் என்று தெரியாது என்றும், நாங்களே நினைக்கவில்லை இனி ஒரு இசை மேடை கிடைக்குமா? என்று. இந்த பெருமைக்குரியவர் எனது மாணவன் திரு.சேகர் ஜோசப் என்று நன்றியுடன் உரைத்தார். எனது பெயரை சுருக்கி சேகர் ஜோசப் என்று வைத்தவரும் எனது குரு தான்.



இறுதியாக கடந்த 24.05.2013 அன்று மட்/தேவநாயகம் மண்டபத்திலே "இசைகேட்டால் புவி அசைந்தாடும்" என்றும் இசை நிகழ்ச்சிக்கு திரு.ஜீவம் ஜோசப் அவர்களை ஒரு கௌரவ விருந்தினராக அழைத்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தேன். அவரது கடைசி உரையிலே இவ்வாறு கூறினார். **"ஒவ்வொரு தடவையும் எனது மாணவன் என்னைக் கௌரவிப்பது வழமை. இம்முறை நான் அவரை கௌரவிக்கின்றேன்"** என்று கூறி எனக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். இந்த கலை மலை இந்தியாவிலே சரிந்த செய்தி கேள்வியுற்று, நான் ஒரு கனம் நிலை குலைந்து கண்ணீர் ததும்பினேன். இவர் போன்ற ஒரு கலை மாமணி இனி மட்டு நகரில் உதிப்பாரா என்பது கேள்விக்குறிதான்.

***திரு. ஜீவம் ஜோசப்பின் மாணவனும், சிஷ்யனுமாகிய திரு.சேகர் ஜோசப்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பாடும் தேனாடு தந்த பல்லிசைக் குரிசில் ஜீவம் மாஸ்டர்

"மீன்பாடும் தேனாடு" என்று புகழப்படும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் இசை வரலாற்றில் ஜீவம் ஜோசேப் என்ற பெயர் ஆழமாகவே பதியப்பட்டுள்ளது. அனைவராலும் ஜீவம் மாஸ்டர் என்று அன்போடும் மரியாதையோடும் அழைக்கப்பட்ட இவர் காலமானார் என்ற செய்தி கிடைத்தபோது அதிர்ச்சியும் இனம்புரியாத சோகமும் ஏற்பட்டது.

மட்டக்களப்பில் ஒருகாலத்தில்- 1960களில் இசையால் மேடைகளைக் கலக்கிய ஜீவம் இசைக்குழுவின் தலைவராகத்தான் இவர் பலருக்கும் அறிமுகமானார். பல்வேறு வாத்தியக் கருவிகளை வாசிக்கும் இவரது ஆற்றலைக் கண்டு பலரும் வியந்தனர். அக்காலத்தில் வேறு சில இசைக்குழுக்கள் இருந்தாலும் முதல்தர இசைக்குழுவாக 'ஜீவம் இசைக்குழுவே' விளங்கியது. இக்குழுவில் இவரது சகோதரர்களான குணம், ஞானம், யோகம் போன்றோர் இவருக்குப் பக்கபலமாக இருந்தனர். குணம் கிட்டாரும், ஞானம் குழல் வாத்தியங்களும், யோகம் பேஸ் கிட்டாரும் வாசித்தனர். ஜீவம் மாஸ்டர், புல்லாங்குழல், கிளாரினட் ரம்பட், சக்சபோன், எக்கோடியன் என்று பல வாத்தியக் கருவிகளையும் தேவைகளுக்கேற்ப வாசித்தார். இவரால் பல இளைஞர்கள் தூண்டப்பெற்று இசைக்குழுக்களை அமைக்கவும் வாத்தியக் கருவிகளை இசைக்கவும் முயன்றனர். இசைத்துறையில் ஏற்பட்ட இந்த ஆரோக்கியமான போட்டிக்கு வழிசமைத்தவர் ஜீவம் மாஸ்டர் அவர்களே. ஆயினும், அன்றிருந்த கலைஞர்கள் மற்றும் இசைக்குழுக்கள் மத்தியில் அவர் ஜாம்பவானாகவே திகழ்ந்தார். அத்துடன் அவரிடம் பயின்ற - பயிற்சி பெற்ற பலர் இன்று கலைத்துறையில் வளர்ச்சியடைந்து புகழ்பெற்றுள்ளனர்.

இசை நிகழ்ச்சிகளில் திரைப்படப் பாடல்களையும், ஏனையோர் எழுதிக்கொடுத்த வரிகளுக் இசையமைத்தும் தாமே எழுதி இசையமைத்தும் இவர் வழங்கிய பாடல்கள் இன்றும் நினைவில் நிற்கின்றன. 'மீன் மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்' என்ற உணர்ச்சிக் கவிஞர் காசி.ஆனந்தனின் பாடலுக்கு, வீரமணி ஐயரும் வேறு பலரும் பல்வேறு மெட்டுகளைப் போட்டிருந்தாலும், ஜீவம் இவர்கள் போட்டிருந்த மெட்டு இன்றும் காதுகளில் நிற்கிறது, பலரது வாய்கள் அதனை முணுமுணுக்கின்றன புலம்பெயர் நாடுகளிலும் அது ஒலிப்பதாக அறிந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத்தில் தமிழ்மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்திய 'பொப்' பாடல்கள் வரிசையில் 'கோட்டைமுனைப் பாலத்திலே கச்சான் காத்தடி....' தவக்காலப் பாஸ்கா நிகழ்ச்சிக்காக இவர் எழுதி இசையமைத்த 'நிர்மலா' திரைப்படப் பாடகர் பேடினன் லோப்பஸ் பாடிய, 'அணைக்கும் கரங்களே......' என்ற பாடல்கள் போன்றவை அவரது மெட்டமைக்கும் திறனுக்கும் இசைஞானத்திற்கும் தகுந்த சான்றுகள். பார்த்தவுடன் மனதில் பதியும் ஓவியம்போல், கேட்டவுடன் நெஞ்சில் நிற்கும் பல மெட்டுகளை உருவாக்கியவர் ஜீவம் ஜோசேப் அவர்கள்.

அக்காலத்தில், ஜீவம் இசைக்குழுவின் நிகழ்ச்சி என்றால் கூட்டம் சேர்ந்துவிடும். கலை விழாக்கள், இலக்கிய விழாக்கள் தேர்தல் மேடைகள், உள்ளூர்க் கலைஞர்களை உருவாக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊரூராகச் சென்று நடாத்திய 'குதூகலம்' போன்ற வானொலி நிகழ்ச்சிகள் என பலவற்றிலும் ஜீவம் இசைக்குழுவின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்தது. அப்பொழுது நகைச்சுவை நாடகங்களால் மட்டக்களப்பு மக்களின் பெரும் அபிமானத்தைப் பெற்று விளங்கிய தமிழ்க்கலா மன்றத்தில் ஜீவம் சகோதரர்களும் இடம்பெற்றிருந்தனர். கலாமன்ற நிகழ்ச்சிகளில் ஜீவம் இசைக்குழுவின் இசைநிகழ்ச்சி முத்திரையாக விளங்கியது.

மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலையம் வெளியிட்ட 'ஆனந்தகீதம்' இசைநாடாவில் அவர் எழுதி இசையமைத்த 'சங்கீத வீணையில் இசை எழுப்பி......' என்ற பாடல், வெரித்தாஸ் தமிழ்ப் பணியில் அடிக்கடி ஒலிபரப்பாகி பலரது பாராட்டுகளையும் பெற்றது.

ஜீவம் இசைக்குழுவின் - ஜீவம் மாஸ்டரின் பாதிப்பாலேயே அன்று பல இசைக் குழுக்கள் தோற்றம் பெற்றன. தெரிந்தோ தெரியாமலோ இசைக்கருவிகளை இசைக்கத் துடித்தன. உண்மையில் அன்று ஒழுங்காக இசையைக் கற்றவர்கள் இசைக்குழுவில் இருக்கவில்லை. கேள்வி ஞானத்தாலும், தம் சொந்த முயற்சியாலும் தெரிந்து கொண்டவைகளை வைத்துக் கொண்டுதான் இந்த இசைக் குழுக்கள் இயங்கின. இந்த குழுவிலிருந்து முதன் முதலாக ஒருவர்தான் முறைப்படி கீழைத்தேச இசையைக் கற்றுக்கொள்ள தமிழ்நாட்டில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அவர் ஜீவம் ஜோசேப் அவர்கள்தான். அங்கு நான்கு ஆண்டுகள் இசை பயின்று 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்று, நாடு திரும்பினார். அதன்பின் மெல்லிசைக் கச்சேரிகள் மட்டுமன்றி, கர்நாடக இசைக் கச்சேரிகளும் இவரது கைவண்ணத்தால் பிரகாசித்தன. அண்ணாமலையில் வயலின் வாத்தியத்தையே முதன்மைப் பாடமாக எடுத்துப் படித்தவர். இடக்கை பழக்கமுள்ளவர். கர்நாடக இசைக்கச்சேரிகளில் வயலின் வாத்தியமே பிரதான துணை வாத்தியமாக விளங்கும். ஆகவே, பல வாய்ப்பாட்டுக் கலைஞர்களும் நம்பிக்கையோடு அழைக்கின்ற நல்லதொரு வயலின் கலைஞராக ஜீவம் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத்துறையில் அவர் பெற்ற பட்டம் அவரை இசை ஆசிரியராக்கியது. ஆசிரியர் பணியில் பாடத்திட்டத்தோடு மட்டும் நின்றுவிடாது பல வாத்தியங்களையும் இசைத்து, 'பல்லிசைக்குரிசில்' என்ற பட்டம் பெற்ற அவர்,கல்லூரிகளில் 'பாண்ட்' வாத்தியக் குழுக்கள் இருக்கின்றதென்றால் அவற்றில் ஜீவம் மாஸ்டரின் பங்களிப்பு, நேரடியாகவோ, மறைமுகமாகவோ உள்ளது என்பதில் மறுப்பிருக்க முடியாது.

மதத்தால் கத்தோலிக்கரான ஜீவம் ஜோசேப் அவர்கள், ஏராளமான கிறிஸ்தவப் பாடல்களையும், வழிபாட்டுப் பாடல்களையும் எழுதியுள்ளார்.



குறிப்பாக, அமிர்தகளியிலுள்ள 'கப்பலேந்தி மாதா ஆலயப்' பாடகர் குழுவின் பொறுப்பாளராகவும் விளங்கி அன்னையின் பேரில் பல பாடல்களை எழுதி இசையமைத்ததோடு, இறுவட்டாகவும் வெளியிட்டார்.கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளுக்காகப் பல பாடல்களையும், பல கரோல் இசைப்பாடல்களையும் உருவாக்கினார். ஆலயப் பணிகளிலும் அக்கறை காட்டினார். முரண்பாடுகளும் ,முறுகல்களும் அவரது வாழ்வில் இயல்பானது. ஆயினும் ,அவை எதுவும் அவரது ஆற்றல்களுக்கும் பணிகளுக்கும் தடையானதில்லை. நானறிந்தவரை மட்டக்களப்பு தமிழ்க் கத்தோலிக்கர் மத்தியில் சாஸ்திரிய இசையில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்ற ஒரே ஒரு கலைஞர் அவரே! யாரையும் தேடிப்போகாத அவர் தன்னைத் தேடி வந்தவர்களுக்கு உதவி செய்யத் தவறியதில்லை. சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, கலைப்பணி என அனைத்திலும் இசையால் தம்மால் இயன்ற அளவுக்கு பங்களித்துள்ள அவரது மறைவு, மட்டக்களப்பு மக்களுக்கு - குறிப்பாக, இசைக் கலைஞர்களுக்கு, கலைத்துறை மாணவர்களுக்குப் பேரிழப்பாகும்.

கலைக் குடும்பத்தில் பிறந்து ,கலைஞனுக்கே உரிய தோற்றப் பொலிவுடனும் ,வித்துவச் சிறப்போடும் வாழ்ந்து ,கலைத்துறையின் பல்வேறு முகங்களையும் தனதாக்கி, பல்லிசைக்கலைஞனாக, பாடகனாக, பாடலாசிரியனாக, இசையமைப்பாளனாக, நாடக நடிகனாக, சிலை வடிக்கும் சிற்பியாக தனது பல்வேறு பரிமாணங்களையும் வெளிப்படுத்திய ஜீவம் மாஸ்டர் அவர்களை பல்வேறு பட்டங்களும் பாராட்டுகளும் தேடிவந்தன. மட்டக்களப்புப் பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த அவரது மறைவு சோகத்தையும் ஒரு வெற்றிடத்தையும் ஏற்படுத்தியிருப்பது மறுக்க முடியாத உண்மை!

- மலர் வேந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு.ஜீவம் யோசேப் அவர்கள் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டிகளில் இருந்து சில.....

➢ **இசைக்கலைஞனாக பரிணமிக்க விரும்பும் இளம் கலைஞர்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?**

- திறமைமிக்க இளைஞர்களும், யுவதிகளும் எம்மிடையே உள்ளனர். எனது பல மாணவர்கள் இறுவெட்டுக்களை வெளியிட்டுள்ளனர். மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இளம் கலைஞர்களுக்கு நான் கூறுவதெல்லாம் சாஸ்திரிய சங்கீதத்தைக் கொஞ்சம் கற்றுக்கொள்ளுங்கள். அப்போது சுருதி, தாளம் போன்றவற்றில் ஞானம் உண்டாகும். சங்கதிகளை எளிதாகப்பாடக்கூடிய திறமை வளரும், வெறும் “கீபோட்” தான் இசை என்று எண்ணாமல் மற்ற வாத்தியங்களையும் கற்றுக்கொள்ளுங்கள் என்பதாகும்.

➢ **தங்கள் எதிர்கால இலட்சியம் பற்றிக்கூறுங்கள்?**

- முக்கியமான ஒரு இலட்சியம் உள்ளது. அதாவது எமது நாட்டின் சொத்து என்று வர்ணிக்கப்படும் நாட்டுக்கூத்தின் பாடல்கள் ஒவ்வொன்றும் ஓர் கர்நாடக சங்கீத இராகத்தில் அமைந்துள்ளன. நாட்டை, தோடி, நீலாம்பரி, நாதநாமக்கிரியா, காம்போதி போன்ற பல இராகங்களில் அமைந்த பாடல்களை அது என்ன இராகம் என்று தெரியாமலே கிராமப்புற மக்கள் பாடி வருகின்றனர். நாட்டுக்கூத்தை ஆராய்ச்சி செய்யும் ஆய்வாளர்களுக்குச் சங்கீத ஞானம் கிடையாது. அதுபோல சங்கீத அறிவு உள்ளவர்களுக்குக் கூத்துப்பாட்டுத் தெரியாது. என்னைப் பொறுத்த மட்டில் கூத்துப்பாடல் மெட்டுகள் தெரியும் அதேவேளை அவை இன்ன இராகத்தில் அமைந்துள்ளன என்ற விபரமும் புரிகிறது. எனவே இந்த மெட்டுக்களை எடுத்து அவை எந்த இராகத்தில் அமைந்துள்ளன என்பதை சுரதாளக்குறிப்புடன் வெளியிடவும், இறுவெட்டாக வெளியிடவும் எண்ணியுள்ளேன். ஏற்கனவே எழுத்தில் இருந்தது சுனாமியினால் அழிக்கப்பட்டுவிட்டது. மீண்டும் முயன்று கொண்டிருக்கிறேன். இப்போதுள்ளவர்களுக்கு இது புரியாவிட்டால் எதிர்கால மக்கள் இதனால் பயனுறலாம் அல்லவா.

➢ **இந்த இடத்தில் மீன்கள் பாடுகிறாள் பாடலைப்பற்றி**


- “யார் எப்படி இசையமைத்தாலும் எங்களது மெட்டு இன்னும் பல நூற்றாண்டு காலம் உயிர்வாழும். நாங்கள் இறந்தாலும் எங்கள் மெட்டு நீடு வாழும்“என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

*நேர்கண்டவர்*
*அன்புமணி*
*நன்றி சங்கமம் (11.10.2008)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசில் தந்த விசித்திர அனுபவம்



பல ஆண்டுகள், பல நூறு மேடைகளில பலவிதமான இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட என் கலைப்பயணத்தில் மறக்கமுடியாத சம்பவங்கள் பல உள்ளன. ஆயினும் மட்டக்களப்புத் தமிழ்க் கலாமன்றத்தினர் கொழும்பு மாநகரில் நடாத்திய மன்றத்தின் முதலாவது ஆண்டுப் பூர்த்திக் கலைவிழாவில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை என்னால் என்றுமே மறக்கமுடியாது. இந்த இடத்தில் யார் இந்தக் கலாமன்றத்தினர் என்ற விபரம் இப்போதுள்ள பலருக்குத் தெரியாதிருக்க முடியாது என்ற காரணத்தால் அவர்களைப்பற்றிச் சிறிது கூற விரும்புகின்றேன்.

1960, 1970 களில் மட்டக்களப்பில் கலை, இலக்கியப் பணியாற்றிய இவர்கள் தான் முத்தமிழ் வித்தகர் விபுலானந்தருக்கு உலகிலேயே முதன் முதலாக முழு உருவச்சிலையை நிறுவியவர்கள். இச்சிலை மட்டக்களப்பு நீதிமன்றத்தின் முன்னால் அமைந்துள்ளது. மட்டக்களப்பு "வெபர்" மைதானத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கத்தை நிர்மாணித்து மட்டுநகர் மக்களுக்கு வழங்கியவர்களும் இவர்களே. இந்த மட்டக்களப்பு தமிழ் கலாமன்றத்தினரின் முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கலைவிழா அப்போது வெளியாகி வந்த தமிழ் நெஞ்சன், ஜெயசீலன் என்பவர்களை ஆசிரியராகக் கொண்ட "அமுதம்" பத்திரிகையின் ஆதரவில் கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் 03.04.1963, 04.04.1963 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. முதல்நாள் கலைவிழாவில் எனது இசை அமுதம் என்ற நிகழ்ச்சி இடம்பெற்றது.

ஒன்றன்பின் ஒன்றாக பதினான்கு இசைக்கரு விகளை மீட்டியபின்பு இறுதியாக அக்காலத்தில் குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாகக் கோயில் திருவிழாக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை செய்யப்படும் பத்து சதம் பெறுமதியான விசிலில் ஒரு பாட்டை வாசித்து நிகழ்ச்சியை நிறைவுசெய்தேன். நிகழ்ச்சி பலரது பாராட்டைப் பெற்றது. குறிப்பாக பத்துச்சத விசிலில் பாட்டுவாசித்தமை பற்றிப் பரவலாகப் பேசப்பட்டது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் நான் வழமைபோல் வயலின், புல்லாங்குழல், எக்கோடியன், கிளாரிநெட், சக்ஸபோன், நாதஸ்வரம் போன்ற பதினான்கு வாத்தியக் கருவிகளை வாசித்தப்பின்னர் பத்துசத விசிலை வாசிக்க எடுத்தேன். அதுவரையில் கரகோசம் மட்டுமே எதிரொலித்த மண்டபத்தில் சற்றும் எதிர்பாராத வகையில் பல பக்கங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான விசில் ஒலிகள் எழுந்தன. மண்டபமே விசில் ஒலிகளால் அதிர்ந்தது.

நான் செய்வதறியாமல் திகைத்துப்போய் விட்டேன். விசில் ஒலி ஓய்வதாக இல்லை. நிகழ்ச்சியை முடித்துவிடலாம் என எனது குழுவினர் சொன்னார்கள். இந்த வேளையில் மண்டபத்தின் முன்வரிசையில் அமர்ந்திருந்த அமரர் நடிகவேள் லடீஸ் வீரமணி அவர்கள் திடீரென எழுந்து மண்டபத்திலிருந்தவர்களை ஓர் மிடுக்கான பார்வையால் பார்த்துவிட்டு மண்டபத்தின் நடுவால் நடந்து பின்னால் சென்றார். என்ன ஆச்சரியம்! உடனே அத்தனை விசில் சத்தங்களும் அடங்கிப்போயின. எங்கும் நிசப்தம் நிலவியது. மண்டபத்தின் பின்னால் நின்ற நடிகவேள் என்னைப் பார்த்து நிகழ்ச்சியைத் தொடருமாறு கையை அசைத்தார்.

நானும் துணிச்சலோடு விசிலை எடுத்து அப்போது பிரபலமாகியிருந்த "சிட்"டுக் குருவி முத்தம்கொடுத்து" என்ற பாடலைப் பலத்த கரகோசத்தின் மத்தியில் வாசித்து முடித்தேன். அதன்பின்பு மண்டபத்தில் விசில் சத்தம் ஒலிக்கவே இல்லை. அன்று நடிகவேள் லடீஸ் வீரமணி அவர்களுக்கு இருந்த ஆளுமை கண்டு நாம் வியந்து போனோம். அன்று எனக்கு அப்போது இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்த "நாவற்குழியர்" நடராஜன் அவர்கள் "அமுதம்" பத்திரிகைக்காக தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவித்தார்கள். இலங்கை வானொலியில் "கண்டதும் கேட்டதும்" என்ற நிகழ்ச்சியில் எனது இசை நிகழ்ச்சி முழுமையாக ஒலிபரப்பப்பட்டது. விசில் தந்த இந்த விசித்திரமான அனுபவத்தைச் "செங்கதிர்" மூலம் பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

*நன்றி*

*செங்கதிர் (சித்திரை 2009 வீச்சு – 16)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தகளி புனித கப்பலேந்தி மாதா ஆலயம் பற்றி

## ஜீவம் யோசேப்

மட்டக்களப்பு வாவி கடலுடன் சங்கமிக்கும் முகத்துவாரத்திற்கு ஒரு மைல் முன்னால் அமிர்தகளி எனும் அழகிய கிராமம் அமைந்துள்ளது. அங்கே வாவிக்கரையின் ஓரத்திலே புனித கப்பலேந்தி அன்னையின் ஆலயம் காட்சியளிக்கிறது. மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மிகப்பழமை வாய்ந்த இவ்வாலயம் 200 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டது. இவ்வாலயம் உருவானதை குறிக்கும் சரித்திரபூர்வமான ஆதாரங்கள் காணப்படாவிடினும் இப்பகுதியில் வாழ்ந்த முன்னோர்கள், வாழும் முதியவர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டு இதன் உருவாக்கம் பற்றிய பல விபரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் அமிர்தகளியில் இரண்டு கத்தோலிக்க குடும்பங்களே இருந்துள்ளன. அவற்றில் ஒரு குடும்பத்தலைவரின் பெயர் சுவானியர் என்பதாகும். பிரம்மச்சாரியான இவர் கிராமத்திலேயே கொஞ்சம் படித்தவராக இருந்திருக்க வேண்டும். இவர் சுவானித்தம்பியர் எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம். அதனால் எல்லாம் அறிந்த சுவானித்தம்பியர் என்ற சொற்றொடர் அமிர்தகளியிலேயே உண்டாயிருக்க வேண்டும் என எண்ணத்தோன்றுகிறது. இவர் பல பாடசாலைகளில் அதிபராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின் இவ்வாலயத்தில் உபதேசியராகப் பணிபுரிந்த "ஐயா" என்று அனைவராலும் அழைக்கப்பட்ட யோசேப் மாஸ்டர் அவர்களின் பாட்டனாராவார். சிறு வயதில் பெற்றோரை இழந்த யோசேப் மாஸ்டரை வளர்த்து ஆளாக்கியவர் இவரே. அன்னையின் ஆலயம் தற்போது அமைந்துள்ள வளவில் வாழ்ந்து வந்த சுவானியர் தெப்பப்புற்களினால் ஒரு சிறிய குடிசையை அமைத்து அதில் ஒரு சிறிய மாதாவின் சொரூபத்தை வைத்து வணங்கி வந்தார்.

இக்காலப்பகுதியில் அமிர்தகழிக்கு நேராக உள்ள கடலில் இந்தியாவின் கோவாவிலிருந்து திருகோணமலைத் துறைமுகைத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த கப்பலொன்று எதிர்பாராத விதமாகக் கடலில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகப் பெரும் ஆபத்தில் சிக்கித்தவித்தது. பெரும் சூறாவளியில் அகப்பட்டு உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த அந்த போர்த்துக்கேயரின் கப்பலின் கப்டனும், மாலுமிகளும் பேரலைகளின் கோரப்பிடியிலிருந்து கப்பலைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் பலனளிக்காது போகவே அக்கப்பலில் இருந்த மாதாவின் சொரூபத்தைக் கட்டிப்பிடித்துத் தங்களைக் காப்பாற்றும்படி புலம்பி அழுதனர். கப்பல் உடைந்து போகுமோ என்று அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏங்கித்தவித்த போது ஒரு திசையில் ஒரு ஒளியைக்கண்டனர். திசையறியாது தவித்த அவர்கள் அந்த ஒளிவந்த திசையை நோக்கி தம் கப்பலைச் செலுத்தினர். பெரும் போராட்டத்தின் பின்னர் கப்பல் பாதுகாப்பாகத் தரையில் தட்டியது. கப்பலை விட்டுத்தரையில் இறங்கிய அவர்கள் அங்கே ஒரு சிறிய குடிலில் மாதா சொரூபம் இருப்பதையும் அருககே ஒரு சிறிய விளக்கு ஒளிவீசி எரிந்து கொண்டிருப்பதையும் கண்டு ஆச்சரியமடைந்தனர். மரியன்னைதான் தங்களைப் பேராபத்தில் இருந்து காப்பாற்றினார் என்பதை உணர்ந்த அவர்கள் அன்னைக்கு நன்றியாக அவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைக்க முடிவு செய்து சுவானியரை அனுகினர். அவரும் மகிழ்வுடன் தமது காணியை அவர்களுக்கு கொடுத்தார். அவர்களும் தங்கள் கப்பலில் இருந்த அன்னையின் சொரூபத்தை அந்தக்குடிலில் வைத்து தாம் திரும்பவும் வந்து அன்னைக்கு ஓர் ஆலயம் அமைப்போம் என்று வாக்குறுதியளித்துச் சென்றனர். அதன்படியே சில மாதங்களுக்குப் பின்பு கட்டடப்பொருட்களுடனும், தொழிலாளர் களுடனும் வந்து 1808ம் ஆண்டு அன்னைக்கு ஓர் ஆலயத்தைக்கட்டி தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றினர். சொறிக்கற்களாலும், சுண்ணாம்பு, நீறு ஆகியவற்றைக்கொண்டு கட்டப்பட்ட அந்த ஆலயம் 200 ஆண்டுகள் கடந்த பின்னரும் இடிந்து சேதமுறாத நிலையில் இருப்பதை நாம் இப்போதும் காணலாம். 1978ம் ஆண்டு வீசிய பெரும் சூறாவளியாலும் இக்கட்டடத்தை அழிக்க முடியவில்லை. அதுபோல 2004ம் ஆண்டு பெரும் சேதத்தை உண்டு பண்ணிய சுனாமியினாலும் இந்த ஆலயத்தை அசைக்க முடியவில்லை. அதனை ஓர் அதிசயமாகவே மக்கள் கருதுகின்றனர்.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் ஒரு ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் அமிர்தகழியைப்பற்றி எழுதிய கட்டுரையில் இந்த ஆலயம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவதுபோல அந்நாட்களில் இந்த ஆலயம் புனித சிந்தாத்திரை மாதா ஆலயம் என்றே அழைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல செப்டம்பர் மாதக் கடைசி வாரத்தில் இந்த ஆலயத்திருவிழா இடம்பெற்றிருக்கிறது. அத்துடன் அவர் கூறுவது போல கடற்றொளிலாளர் கடலுக்குச் செல்லுமுன் அன்னையின் முன் மெழுகுதிரி கொளுத்தி, உண்டியலில் சில்லறைக்காசு போட்ட பின்பே தாம் தொழிலுக்குச் செல்கின் றனர். இதனை இன்றும் நாம் காணலாம். அவர் தம் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போல 1822ம் ஆண்டு இந்த ஆலயம் பூரணமான ஓர் ஆலயமாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கலாம். அவரின் கட்டுரையின் ஒரு பகுதியை இங்கே நீங்கள் காணலாம்.

Facing the ocean there stand at the entrance of the lagoon a little church built by the Goanese Priests in 1822. It served as a temporary residence when they came from Trincomalee by sea. It was appropriately dedicated to the Star of the Sea, under the title of Our Lady of Good Voyage (Sinthattirei Mada, the Mother of the voyage without danger).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில்



அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்
தான் பயின்ற வகுப்பில்



05.07.2013ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்



06.07.2013ல் இறுதியாக எடுக்கப்பட்ட படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The statue carries on one hand the Infant Jesus and in the other a three-mast little boat with rigging and sail complete, all of silver. Sailors, boatmen and fishers, pagan and Christian, never fail to light a little candle and to drop a little coin into the charity-box in front of the statue, trusting that they will make a good voyage or big haul at fishing. The festival in September attracts a great number of devotees; the ceremonies are identical with those at St.Ann's Church and other church festivals.

ஆரம்பத்தில் இவ்வாலயம் கோவா மேற்றிராசனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.




பின்பு தூத்துக்குடி மேற்றாசனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நாட்களில் தூத்துக்குடியிலிருந்து மக்கள் பல கப்பல்களில் வந்து அன்னையின் திருநாளை மிகச்சிறப்பாகக் கொண்டாடினர். கொடியேற்றத்துடன் திருநாள் வரை இங்கு தங்கியிருந்து கொண்டாடினார்கள். ஆண்டுதோறும் இவர்கள் வரவை அமிர்தகழி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்களாம்.

பின்பு இவ்வாலயம் திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. அதுமுதல் புளியடிக் குடா புனித செபஸ்தியார் ஆலயப் பங்கின் ஒரு அங்கமாக விளங்கியது. 2009ம் ஆண்டு அதிவந்தனைக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள், புனித கப்பலேந்தியன்னை ஆலயப் பங்கு என்ற பெயரில் இதனை ஓர் தனிப்பங்காகப் பிரகடனப்படுத்தினார்.

ஆண்டுதோறும் திருநாளுக்கு முந்திய நாள் இரவு அன்னையின் திருச்சொரூபம் கப்பலில் வைத்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுவது ஓர் சிறப்பான அம்சமாகும்.

இதனை நடைமுறைப்படுத்தியவர் 1950 களில் இங்கு பணியாற்றிய யேசுசபைத் துறவி அருட்திரு குக் அடிகளார் ஆவார். அதுபோல திருநாள் திருப்பலியின் பின்னர் அதே கப்பலில் அன்னையின் திருச்சொரூபம் மட்டக்களப்பு வாவியில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். இதனை நடைமுறைப்படுத்தியவர் வணபிதா F.X.மேயர் அடிகளாராவர்.

பழைய ஆலயத்திற்குப்பக்கத்தில் புதிய ஆலயம் வணபிதா.யோசப்மேரி அடிகளாரின் காலத்தில் 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2000ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் மாதா பவனி வருதல்



அந்த நாட்களில் மற்றைய ஆலயங்களில் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்வதைப் போன்றே கப்பலேந்தி மாதாவின் சொருபமும் சேரோலையில் வைத்து எடுத்துச் செல்லப்பட்டது. 1950ம் ஆண்டுகளில் இங்கு பணியாற்ற வந்த யேசுசபைத் துறவி வணபிதா.குக் அடிகளார் தான் இந்த முறையை மாற்றி அமைத்தார். அவர் ஒரு கப்பலைச் செய்து பீடத்தில் வைத்து அதன்மேல் தற்போது சிற்றாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் மாதாவின் சொருபத்தை அதன் மீது வைத்தார். உற்சவ காலத்தில் அந்தக் கப்பல் இறக்கப்பட்டு போர்த்துக்கேயரின் கப்பலில் வந்த மாதாவை அதன் மேல் வைத்து ஊர்வலமாக எடுத்து வரச்செய்தார். அந்த நடைமுறை தான் இப்போதும் இங்கு பின்பற்றப்படுகிறது. அந்நாட்களில் திருநாள் முடிந்ததும் கப்பல் பீடத்தில் மேல் ஏற்றப்பட்டு மாதாவின் சொருபம் மீண்டும் கப்பல் மேல் வைக்கப்படும்.

புனிதர்களின் சுருபங்கள் பீடத்தில் இருக்ககூடாது என்ற நிலை நடைமுறைக்கு வந்த போதுதான் கப்பல் பீடத்திலிருந்து அகற்றப்பட்டது. பழைய ஆலயத்தின் தரைக்கு சீமெந்து போட்டவரும் வணபிதா.குக் அடிகளாரே ஆவார். அதற்குமுன் ஆலயத்தின் தரை நீற்றினால் அமைக்கப்பட்டிருந்தது.

- ஜீவம் யோசேப் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலேந்தி அன்னை ஆலயத்தில்

# அமரர்.திரு.ஜீவம் யோசேப் அவர்கள்......

கப்பலேந்தி அன்னை ஆலயம் தற்போது உள்ள இடத்தில் அமைவதற்கு இடத்தைக் கொடுத்தவரின் வழியில் வந்ததாலோ என்னவோ சிறுவயதிலிருந்தே இவர் ஆலய விடயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அனேகமான பழைய கதைகளையும், தகவல்களையும் ஆரம்பத்தில் வழிபா டுகள் 'இலத்தீனில்' எவ்வாறு இருந்தது, பாடல்கள் எவ்வாறு, யார் யார் ஆரம்ப காலத்தில் பங்குத்தந்தையாக இருந்தாரகள், அவர்கள் ஆலயத்திற்கு என்னென்ன செய்தார்கள் என்பதையும் நன்கு அறிந்திருந்தார்.

அதுமட்டுமன்றி இவ்வாலயத்தின் பாடகர் குழுவில் திருப்பலிப்பாடல்கள் இலத்தீனில் இருந்த காலத்திலிருந்து 50 ஆண்டுகளுக்குமேல் பாடி, பாடகர் குழுவிற்கு பொறுப்பாயிருந்து வழிநடத்தி திருப்பலிப்பாடல்களையும், அன்னைக்கே உரிய தனித்துவமான பாடல்களையும் எழுதி இசையமைத்து பழக்கியிருக்கிறார். இவரது பாடல்களில் சில **'இராக தீபங்கள்'** எனும் திருப்பலிப்பாடல் புத்தகத்தில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. 2004, 2012 ஆகிய காலப் பகுதியில் **"கப்பலேந்தி கானங்கள் பாகம் I, II"** தொகுப்பிற்கான பாடல்களை எழுதியும் இசையமைத்துப் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




1995ம் ஆண்டு கப்பலேந்தி அன்னையில் புதிய ஆலயம் கட்ட முன்னின்று செயற்பட்டவர். அதனை வடிவமைத்துக் கட்டுவித்தார். அந்நாட்களில் ஆலயம் கட்ட போதிய பணவசதி இல்லாமல் இருந்தது. சிறிது சிறிதாகக் கட்ட வேண்டி இருந்தது. அவர் அடிக்கடி சொல்வார் ஆலயத்தைக் கட்டும்போது காலையில் கப்பலேந்தி அன்னையை வழிபட்டு விட்டு எப்படி இன்று கோயில் வேலைகளை தொடர்வது பணமோ பொருட்களோ இல்லாமல் இருக்கிறதே எனும் போது யாரோ ஆலயத்திற்கு வந்து பணமோ, பொருட்களோ கொடுத்துவிடுவார்களாம். ஆலயக்கட்டுமாணப் பணிகள் தொடருமாம். இப்படியாக பல அற்புதங்கள் நடந்ததாம். ஆலயம் கட்டி முடிக்கப்பட்டதும் ஆலயம் சிறியதாக இருந்ததனால் இவரது சகோதரி சகோதரர்களின் பண உதவியுடன் ஆலயத்தின் இருப்பக்கங்களையும் பின்னால் உள்ள திருப்பண்ட அறையையும் வடிவமைத்துக்கட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் முகப்பிணை கப்பல் வடிவில் இருக்க அதனை வடிவமைத் திருந்த போதும் ஆலயப்பணியில் அவரது காலம் முடிவுற்றதாலும் வேறு காரணங்களாலும் இதனை செய்ய முடியாமல் போனது.



2006ம் ஆண்டு புதிய கொடிமரம் அமைத்து அதன் கீழ் வெளியே மறுப்பக்கம் இருந்த அன்னையின் சொருபத்தை வைக்க வடிவமைத்தார். 2008ல் ஊர் மக்களின் நிதி உதயுடன் கப்பலேந்தி அன்னை ஆலயத்தின் 200வது ஆண்டு நினைவுச் சின்னமாக இது சிற்றாலயமாக திறந்து வைக்கப் பட்டது.

அதில் அன்னை இருக்கும் கப்பலை செய்தவரும் இவரே......



அன்னையின் சிலைக்கு பூச்சுப்பூசுவதும் உடைந்த சிலைகளை சரி செய்வதும் இவரே...... நீண்ட நாட்களாக வட்டாரத் தலைவராகவும் ஆலய நிர்வாகச் சபையிலும் இருந்திருக்கிறார். 1986ம் ஆண்டு இந்தியாவின் பெங்களுரில் நடைப்பெற்ற மறைமாவட்ட மறையா சிரியர் மாநாட்டிற்கு இலங்கை யின் கிழக்குமாகாணத்திலிருந்து சென்றது இவர் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

2005ல் கப்பலேந்தி அன்னை ஆலய பாடகர் குழு மூலம் "கிறிஸ்தோதையம் மலர்ந்தது" எனும் வானொலி நிகழ்ச்சியை நிகழ்த்தியும் உள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
30
07
1939



விண்ணில்
11
07
2013

கலாபூஷணம், பல்லிசைக் குரிசில்

சங்கீத பூஷணம் **திரு. ஜீவம் யோசேப் (அருளானந்தம்)**

(முன்னாள் உதவி அதிபர் புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்பு)

அவர்கள் காலமானார்

அன்னார், காலஞ்சென்ற திரு. திருமதி யோசேப் அவர்களின் அன்பு மகனும், மாலினியின் அன்புக் கணவரும், எமில் பிரியானந்தின் பாசமிகு தந்தையும், லாவண்யா எமில், அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திரு. இராசையா முதலி மற்றும் சிவபாக்கியம் இராசையா முதலி அவர்களின் அன்பு மருமகனும், திரு. மரியசிங்கம், காலஞ்சென்ற திருமதி அனஸ்ரேசியா அன்னதாஸ், காலஞ்சென்றவர்களான டாக்டர் ஞானப்பிரகாசம், டாக்டர் புவனேசராசா, மற்றும் ஞானம் யோசேப், ஞானம் யோசேப், யோகம் யோசேப், திருமதி சரோஜா மகேந்திரசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், திருமதி பிரசன்னி சுதாகரன், திருமதி [illegible] அசரெட்னம், ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. திருமதி ஞானசிங்கம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.07.2013 பிற்பகல் 3.00 மணியளவில் இல. 14 கதிர்காமர் வீதி, அமிர்தகழி இல்லத்திலிருந்து சமய சடங்குகளுக்காக அமிர்தகழி புனித வியாகுல மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் நல்லடக்கத்திற்காக கள்ளியங்காடு கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- குடும்பத்தினர் -

# மரண அறிவித்தல்

தோற்றம்
1939
07
30



மறைவு
2013
07
11

கலாபூஷணம்

## அமரர் அருளானந்தம் ஜீவம் ஜோசேப்

புனித மிக்கேல் கல்லூரி
புகழோடு விளங்கிட
பூரணமாய் உழைத்திட்ட
கலைஞானி ஜீவன்
காற்றோடு கரைந்துவிட்டார்

தாள்கற்ற கல்லூரி
தண்புகழ் கொண்டு விளங்கிட
தளராது உழைத்து
தரணி போற்ற வைத்தார்

கல்நூற்றாண்டு ஜீவன்
கல்லூரியில் பயணித்த காலம்
காலமெல்லாம் கலைத்துறை ஓங்கிட
கடினமாய் உழைத்தார்

கல்லூரி வாண்ட் இசை
கடினமான இவர் உழைப்புக்கு
கச்சிதமானதோர் அடையாளம்
புதுமைகள் பல புகுத்தி
புத்தாக்கம் பெற வைத்தார்

இசை யாசிரியராகவே இவர்
இருந்த வந்தபோதும்
மூன்று தமிழும் சிறந்தோங்க
முழுமனம் கொண்டு உழைத்தார்

தமிழ் தின போட்டிகளில்
தரமான ஆக்கங்கள் படைத்து
நாடளாவிய ரீதியிலே
தங்கப் பதக்கங்கள் பெறவைத்தார்

தவிலோடு நாதஸ்வரமும் கலந்த
தமிழர் இன்னியம் இங்கு
தலைசிறந்து விளங்கிட
தனியாக நின்றுழைத்தவர்

கல்லூரியை வடிவமைத்த
தவத்திரு பொனல் அடிகளாரை
கல்லூரி முன்றலிலே
திருவுருவச் சிலையாக வடித்த சிற்பி

சாதனைகள் படைத்து கலையுலகில்
சரித்திரமான கலாபூஷணம் ஜீவன்
கல்லூரி உள்ளவரை வாழ்வார்
கல்லூரி தன் கொடி பதித்து
கண்ணீரை காணிக்கையாக்குகிறது.

மட்/புனித மிக்கேல் கல்லூரி
பாடசாலைச் சமூகம்

[illegible] 066 2227970



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1939 - 07 - 30



உதிர்வு
2013 - 07 - 11

## அமரர். சங்கீத கலா பூஷணம்
## திரு. ஜோசப் அருளானந்தம் (ஜீவம் ஜோசப்)

**வீணை ஓய்ந்து நரம்பறுந்து பூவுலகே சதிர்த்ததம்மா**

காலச் சக்கரத்தின் ஓட்டத்தில் நீர் வாழ்ந்த
காலங்கள் குறுகிய தானாலும்
கர்த்தருக்காய் நீர் வாழ்ந்த காலங்கள் அதில் - அதிகம்
இறைவனை இன்னிசை மழையில் நனைத்தாய்

இனிமையான பேச்சும், இன் முகச் சிரிப்பும்
நெஞ்சத்தை நெகிழ வைத்தன
கப்பலேந்தி அன்னை ஆலயத்தில் பணியை செய்தாய்
கவிபுனைந்தாய் வாழ்ந்தாய்

வானங்களின் எல்லை தாண்டி சொல்லாமலே சென்றாயோ
கற்பனைக்கு எட்டாத தூரம் சென்று விட்டாயோ
உன் பிரிவை ஈடு செய்ய பிறரொருவர்
வந்தாலும் முடியாது

மரணப்பால் நீ மறு வாழ்வுபெற்றாய்
நாமிங்கு வேரறுந்து நிற்கின்றோம்
நீ விட்ட பணிதனை இடைவிடாமல் தொடர்கின்றோம்
மரணம் வாழ்வின் முடிவல்ல மறுவாழ்வின் ஆரம்பம்

பிரிவால் துயருறும்
பங்குத் தந்தை, பங்குச் சபை
புனித கப்பலேந்தி அன்னை ஆலய
அங்கத்தவர்

Printed @

# கண்ணீர் அஞ்சலி



இகம்
30 - 07 - 1938

பரம்
11 - 07 - 2013

கலாபூஷணம்
## ஜீவம்ஜோசப்
அவர்களுக்கு சமர்ப்பணம்

மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரில்
முத்தமிழ் சிறப்பான அமிர்தகழியில் உதித்தாயையா

எந் நேரமும் உன் சிரித்த முகம் எங்கள் நெஞ்சில்
நெகிழ்வான இடம் பிடித்தீரையா

இந்திய அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் உன்
இசைத் துறையை வளர்த்தீரையா

கிழக்கு பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் சங்கீத
பூஷண பட்டம் பெற்றவரையா

பலவிதமான வாத்தியங்களை மிகவும் இலகுவாக
இசைக்கும் வழியில் சமத்தாக விளங்கினீரையா

மேலைத்தேய கீழைத்தேய இசையிலும் பாண்டித்தியம்
பெற்றவர் நீரையா

மீன்மகள் பாடுகிறாள் பாடலுக்கு இசையமைத்தீரையா

ஒரே மேடையில் 18 வாத்தியங்களை வாசித்து
"பல்லிசைச் சுடர்" என்ற பட்டத்தைப் பெற்று
பல பதக்கங்களையும் பெற்றீரையா

25 மேற்பட்ட வாத்தியங்களை வாசித்து
கலை துறையில் நீங்கா இடம்பிடித்தீரையா

35 ஆண்டுகளுக்கு மேலாக மட்டுமா நகரில் கலைப்
பணியாற்றினீரையா

பல இசை கலைஞர்களை உருவாக்கி ஜீவன்
இசை குழுவை உருவாக்கினீரையா

இலங்கையில் தமிழ் பாடசாலையில்
முதன்முதலாக கலைசார பாண்ட் வாத்தியக்
குழு ஒன்றை உருவாக்கினீரையா

எழில் பொங்கும் வாவிக் கரையில் அமைந்த
கப்பலேந்திமாதா அருளாலயத்தை முன் நின்று
வடிவமைத்து உன் இன்னிசை மழையால் ஆலயத்தை
அலங்கரித்தீரையா

எமது நெஞ்சங்களில் நீங்கா இடம்
பிடித்து இறைபதம் அடைந்தீரையா

16-07-2013

பிரிவால் துயருறும்
சிந்தாத்திரை மாதா முன்பள்ளி
ஆசிரியைகளும், பங்குத் தந்தையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நீ பிறக்கின்றாய்!

இசைமடி[illegible] மடியில்
இருகரங்[illegible] ஏந்திய
இனிய பேழை[illegible] தாயின் கோவிலில்
இன்றுவரை இசை பாடிய ஜீவம்அண்ணா
இடதுகையால் வயலின் இசைக்கும்
இலங்கையின் முதல்தர கலைஞரே!
இந்தியாவின் வேளாங்கன்னி அன்னைஅருகே
இனிய உன்உயிர் சந்தாயோ ஜீவம்அண்ணா!

இங்கே நீ படைத்த மேன்மைகள் விம்முகிறாள்-தன்
இதயம் கலங்கி வாலிமகள் அழுகிறாள்
இசையின் இறைவி நீ அன்று தந்த
இசைத்துளியால் பரிசினால் பேர்பெற்று
இந்த மீனாந்தி இன்று மீன்மகள் ஆனதினால்
இதயமே விம்முது உன் நினைவால்

இசைக்கருவிகள் பதினைந்துக்கு மேலாக
இலகுவாக ஒருமேடையில் கையாண்ட
இசைமேதையே, அழைக்கிறோம் நாம் இன்று
இங்கே நீ வழந்த சிலைகளைப் போல்
இனிநாம் உனக்கு சிலைவடிக்க - எம்மை
இறைவன் வைத்துவிட்டதை நினைக்கும் போதினிலே
இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது அண்ணா!

இருண்டு இசைவானம் இன்று அமாவாசையாய்
இசையின் சூரியன் நீயின்றி பகல் இரவானது
இசைதந்த இசைத்தாயின் இனிய மகனே நீ!
இறக்கவில்லை, பிறக்கின்றாய் இன்று எம்மனதில்.
இந்நாசியார் நாடகத்தின் இசையின் இயக்குனரே
இசை நடனநிருத்தியகலாலய இசையின் முதல்வனே!

இன்று தொடங்குது உன் இறுதிப்பயணமல்ல
இளைய உலகத்திற்கு இந்தன் ஒரு பயணம்.
இனி நீ [illegible] ஆகின்றாய் - நீ
இலைகளை மட்டும் [illegible] உங்கள் உருவம்
இல்லையென்று [illegible] அருமையான ஜீவமண்ணா!
இந்த மட்டுநகர் [illegible] உங்கள் சிலை உதிக்கும்
இருதயத்தில் [illegible] ரத்தமாய் ஊற்றெடுக்கும்
இசை [illegible] உங்கள் குரலோசை கேட்கும்
இது வெறும் கண்ணீர் அஞ்சலி அல்ல பன்னீர் அஞ்சலி
இதய [illegible] சொரியும் மலர் அஞ்சலி.

அஞ்சலி: நிருத்திய கலாலய இயக்குனர் திருமதி வசந்தி நேரு,
மாணவர்கள் [illegible] பெரிய உப்போடை, மட்டுநகர்.

ஆக்கம்: [illegible] இ.மனோகரன் மரியநேசமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## பல்லிசைச் செம்மல் வாத்திய விற்பன்னர்
## கலாபூசணம் அமரர் ஜீவம் ஜோசப்

மீன்மகள் பாடுகிறாள் என மட்டுநகர் எழிலை
மனதில் நிலைக்கச் செய்த உத்தம இசை அரசரே!
பரத கலாலயாவின் மூத்த அணிசேர் கலைஞரே!
பல்வாத்திய மன்னரே! வழிகாட்டியே ....
சிரித்த முகத்தினாலும் சிறந்த இசையினாலும்
கலாலய நிகழ்வுகளை சிறக்கச் செய்தீரே
கிராமியம், மெல்லிசை, பலநாட்டுப் பாடல் என
மெட்டமைத்தமை மட்டுமின்றி
நடன அரங்கேற்றங்கள், ஆண்டு விழாக்கள் என
கலாலய நிகழ்வுகளை அலங்கரித்தீரே!
பரத கலாலயாவுக்காக நீர்தந்த செங்கதிரோனே
கொல்லா கொல்லா மெட்டுக்களும்
நாட்டிய நாடக மெட்டுக்களும் மறக்க முடியாதவை
சக்தி கிளசிக்கல் டான்ஸ் ஸ்ரார் சமரில்
உமது பாடல் இசைகள் எமது வெற்றிக்கு
வித்திட்டதை மறந்து விடுவோமா?
நித்தம் உம் கலை நீடித்திருக்கும் என்றிருக்க
நிலையில்லா வாழ்வென எண்ணி
நீங்கள் மறைந்தாலும் உங்கள் இசை
என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்....
**"கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாய் சமர்ப்பிக்கின்றோம்"**

– பரத கலாலயத்தினர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org